வருட சந்தா ரூ. 5. தனிப்பிரதி 1 அணா

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்.
C. N, அண்ணாதுரை M. A.

"தமிழுக்கு மணமென்று பேர்!—இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்தஊர்!"
[கவி பாரதி தாசன்]

மலர் 1. || காஞ்சீபுரம் 22—3—42 விசு—பங்குனி 9உ ஞாயிறு || இதழ் 3


# கிட்கிந்தையில் கிரிப்ஸ்!

[ பரதன். ]

மரக்கிளைகள் முறிந்தன! கனிகள் கசக்கிப் பிழியப் பட்டன! காய்கள் கடித்தெறியப்பட்டன! துளிர்கள் துவைத்து மிதிக்கப்பட்டன! ஒரே ரகளை! கூத்தாட்டம்!

மற்றோர்புறத்திலே, மதுமயக்கத்தால் மல்லாந்து படுத்தும், புரண்டுகொண்டும் குளறிக்கொண்டும் பல குடிவெறியர்கள் இருந்தனர்.

சாலை ஓரத்திலும், மாவிலை மெத்தைமீதும், மரப்பொந்துகளிலும் மலைச்சாரலிலும், சல்லாபங்கள் சொல்லொணாக்கோலாகலத்துடன் நடந்து கொண்டிருந்தன. களியாட்டம், வெறியாட்டமாகி விட்டது. குதூகலம், ஆர்ப்பாட்டமாகி விட்டது. குதூகலம் மிதமிஞ்சி விட்டால், மனிதர்களிற் சிலரையே குரங்குச்சேட்டையில் கொண்டு போகிறதென்றால், குரங்குகளுக்குக் குதூகலம் பிறந்துவிட்டால், அவைகளின் "கும்மாளத்தை"க்கூறவும் வேண்டுமா! கிஷ்கிந்தையில், வானரங்கள், மனம்போன படியெல்லாம், ஆடின, பாடின, மது குடித்துப் புரண்டன, மரங்களின் மீதுக் குதித்தன, மலைகள்மீது தாவின!

வானரஅரசன், தனது குடிமக்களின் கோணல் சேட்டையை அடக்கமுடியவில்லை- முயற்சிக்க முன் வரவுமில்லை. ஏன்! அரசனே, அந்தப்புரத்தில், காமமும் கள்ளும் கலந்துபருகியதால், கட்டுக்கடங்காது ஆடிக்கிடந்தான்!

பிறகு இலட்சுமணன் வந்து கடிந்துரைக்கத் தெளிந்தான் சுக்ரீவன், வானரர்களும் வழிக்குவந்தனர் என்று வால்மீகி, கிஷ்கிந்தையில் நடந்த ரசமான ரகளைபற்றி வர்ணித்திருக்கிறார், இராமாயணத்தில்.

* * * * *

மேடை முறிந்தது! ஒலிபெருக்கிகெட்டுவிட்டது! ஆரவாரம் கிளம்பிற்று! ஆவேசமாகப் பேசினார்! என்று இரண்டு வாரங்களாக ஆச்சாரியார் சுற்றுப்பிரயாண சம்பவம்பற்றிப் பத்திரிகைகள் எழுதுகின்றன.

சென்னை, திருமயிலையில் ['திரு' உபயோகித்ததற்காக, தோழர் பக்தவத்சலம் கோபித்துக்கொண்டு ஸ்ரீமயிலையில் என்று கூற முன்வரவுங்கூடும்] சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டுவந்து பேசினபோது ஆச்சாரியார், "நான்விரைவில் வடநாடுபோகப் போகிறேன். **எனது கிஷ்கிந்தையில் வானரசைன்யம் தயாராக இருக்கிறது என்று அங்குள்ள சகோதரர்களுக்குச் சொல்லலாமா:**" என்று கேட்டார்.

இது என்ன பரதா! துண்டுதுண்டாக ஏதேதோ கூறுகிறாய், சம்பந்தம் என்ன என்று கேட்பீர்கள். சரி, சரி, இன்னமோர் 'துண்டு' சேர்த்துக்கொள்ளுங்கள், பிறகு தொடுத்துப் பார்ப்போம்.

சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ், இந்தியாவுக்கு வர, இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு விட்டார்!

வால்மீகி வர்ணித்த கிஷ்கிந்தை, ஆச்சாரியாரின் சுற்றுப்பயணம், அவரது மயிலைச்சொற்பொழிவு, கிரிப்சின் வருகை, இவைகளைத் தொடுத்து, நான் முதலிலே கொடுத்துள்ள தலைப்பு இருக்கிறதே, **கிஷ்கிந்தையில் கிரிப்ஸ்** என்பது; அதைப் பொருத்திப்பாருங்கள், பொருள் விளங்கிற்றா? விளங்காதவர்கள், கேளுங்கள், விளங்கிக்கொண்டவர்கள் நான் கூறுவது சரிதானா என்பதைக் கவனியுங்கள்; இராமாயணகாலத்திலே, இராமருக்கு உதவிசெய்வதாகக்கூறிய வானரப்படையும், அரசரும், ஆனந்த அமளியில் ஈடுபட்டு, குடித்து வெறித்துக் கூத்தாடினதாக வால்மீகி கூறியுள்ளார். பிரிட்டிஷாருக்கு இப்போது உதவி செய்வதாகக் கூறிக்கிளம்பியுள்ள ஆச்சாரியாரின் பிரயாணம், பிரசங்கம், ஆங்காங்கு நடந்த சம்பவங்கள், ஆகியவை எனக்கு, வால்மீகியின் வர்ணனையைக்கவனப்படுத்தின. வாலி கொல்லப்பட்டு, கிட்கிந்தையின் முடி தனக்குத்தான் என்பது ஏற்பட்டு விட்டதும், சுக்ரீவன், சுந்தராங்கிகளின் சுகுணத்தைச் சுருதியாகக்கொண்டு ஆடினான்! வானரர்களில் சுந்தராங்கிதளா? என்று என்னைக் கேட்காதீர்கள், வால்மீகியின் வாழையடி வாழையாக வந்தோரைக் கேளுங்கள். சுக்ரீவன் ஆடியபடி, இங்கும் நடக்கிறதுபோலும், நாட்டுக்கோர் புது அரசியல் தருகிறோம் என்பது வெளிப்படையாகக் கூறப்பட்டு "நம்பினோர்க்கு நிர்வாக சபையிலே பதவிகிடைக்கும்" என்று ஜாடைமாடையாகக் கூறப்பட்டும் வருவதால், ஆச்சாரியார், அன்று கிட்கிந்தையில் வானர அரசன்

அடைந்ததுபோன்ற ஆனந்தங்கொண்டுள்ளார்போலும் என்று கருதினேன்; வெளியே கூறவில்லை. ஏதோ ஒரு ஊரில் அவர் சகாக்களுடன் அமர்ந்திருந்த பிரசங்கமேடை கூடமுறிந்து விழுந்ததாகப் பத்திரிகையிலே படித்தேன், உடனே கிட்கிந்தையில் மரக்கிளைகள் முறிந்தன என்று வால்மீகி கூறினாரே அது நினைவுக்கு வந்தது. அன்று கிட்கிந்தையில் நடந்ததுபோல் இன்று இங்கு நடக்கிறது என்று எண்ணினேன், எண்ணினதைத் எடுத்துரைத்தால், ஆச்சாரியாரையும் கிட்கிந்தா வாசியையும் ஒன்றுக்கிப் பேசுகிறாயா என்று கேட்க பாரத மாதாவின் பிள்ளைகள், கண்கள் சிவக்க (கோபத்தால் தான்!) கைகால் துடிக்க (ஆத்திரத்தால்!) கிளம்பிவிடுவார்களே என்றெண்ணி, மனமே பொறு என்று கூறி என்னைநானே சமாதானப்படுத்திக்கொண்டேன். சில சமயங்களில் மௌனம், பேச்சைவிட சிலாக்கியமல்லவா! ஆனால், அன்பர் ஆச்சாரியார், தாமாகவே, வலிய நான் கூறஎண்ணியதைக் கூறிவிட்டார். மைலாப்பூரில் பேசுகையில், **எனது கிஷ்கிந்தையில் வானர சைன்யம்** தயாராக இருப்பதாக நான் வடநாட்டாருக்குக் கூறட்டுமா என்று கேட்டாரல்லவா? தமிழகம், அவரது கருத்தின்படி கிட்கிந்தை! தமிழ்நாட்டவர், (நானும் நீங்களுமல்ல, ஆச்சாரியாரின் திருவடிகளே சரணமெனக் கொண்ட அன்பர்கள்) வானர சேனைகள்! இது ஆச்சாரியார் வாக்கு, அடியேன் கூறினதல்ல. இப்போது சொல்லுங்கள், ஆச்சாரியாரின் பிரயாணப் பிரபாவத்தைக் கண்டதும் எனக்கு கிட்கிந்தைக்காட்சி பற்றிய கவனம் வந்தது தப்பா! ஆச்சாரியாரே கூறிவிட்டாரே, தமிழகம்கிட்கிந்தை என்று தமிழர், வானரர் என்று! சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ், இங்கு இன்னம் சிலநாட்களில்வரப்போகிறார்ஆகையால் தான், **கிட்கிந்தையில் கிரிப்ஸ்** என்று தலைப்பிட்டேன்.

வருகிற சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ், ஆச்சாரியார் திரட்டிவைத்துள்ள "வானர சேனையை" க்கண்டு, "கண்டேன், கலிதீர்ந்தேன்" என்று கூறுவாரா, "கண்டேன், அதைவேண்டேன்" என்று சொல்வாரா, என்பது அரசியல் ஆரூடக்காரருக்குத் தெரியும். நமக்கு அந்த ஆரூடத்தில் நம்பிக்கை கிடையாது.

போர்சம்பந்தமாகத் தாங்கள் பரிபூரணமாக ஒத்துழைக்கத் தயார் என்பதையும், போர் ஆதரவுப் பிரசாரத்தை மக்களிடம் செய்யத்தயார் என்பதையும், பணம்திரட்ட, பட்டாளத்துக்கு ஆட்கள்சேர்க்க, பீதிகளைத்தடுக்க, எதிரியின் கேடான குணங்களை எடுத்துரைக்கத் தாங்கள் தயார்-என்பதை, வருகிறவருக்கு முன்கூட்டியே தெரிவிக்கிறார், வசிஷ்ட வர்க்கத்தவர்! இவ்வளவு செய்ய நாங்கள் சம்மதிக்கிறோம். செய்து கொண்டும் இருக்கிறோம். இத்தகைய "ஊழியர்களை" வேலைக்கு அமர்த்திக் கொள்ளவேண்டும் துரையே" என்று சர்ச்சில் சர்க்காருக்குக் கூறுவதே ஆச்சாரியாரின் பிரசார நோக்கம்.

* * * * *

"ஜப்பானியரின் படையெடுப்பினால் இந்தியா பெரிதும் பாதிக்கப்படுமே"

"ஆமாம்! அதைத்தானே நான் மாகாணமெங்கும் சுற்றுப்பயணம் செய்து மக்களுக்கு விளக்கிக்கொண்டிருக்கிறேன்."

"கட்டுப்பாடாக மக்கள் இருக்கவேண்டும், பீதி கூடாது, தைரியம் வேண்டும்."

"அதேதான் சார், நான் சொல்லிவருகிறேன்"

"எதிரியைத்தடுக்க, வீட்டிற்கொரு ஆள் கிளம்ப வேண்டும்"

"போதாது துரையே! இதோ பாருங்கள், பத்திரிகையை, பதினைந்து நாட்களுக்கு முன்பு மயிலாப்பூரில் பேசினேன் என்ன சொன்னேன் படியுங்கள். இதோ நானேபடிக்கிறேன். வீட்டிற் கொரு இராமனும், இலட்சுமணனும் கிளம்பவேண்டும். வீட்டிற்கு இரண்டுபேர் தேவை ஒருவரல்ல!"

"ரொம்பசரி! ஆனால் இந்த அஹிம்சை, அஹிம்சை யென்றுகூறிவந்தீர்களே"

"அதுவா! அதுசும்மா, தந்திரத்துக்காக. எங்கள் ஜனங்கள், ஜாதிமதபேதம், வறுமையாகிய கொடுமைகளால் எங்கே கிளம்பி விடுகிறார்களோ வென்று, அடக்கிவைக்க அந்தப்போதனை செய்துபார்த்தோம். அதைவிட்டு விட்டேன். இதோகேளுங்கள், "ஹிம்சைஎன்ற மதுவைப்பருகியுள்ள எதிரியை நாம்அஹிம்சை ஆயுதத்தைக்கொண்டுதடுக்க முடியாது"—என்று மயிலைப்பேச்சிலே இருக்கிறது. ஜப்பானியன்இம்சைக்காரன் அவனிடத்திலே நமது அஹிம்சை பலிக்காது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்."

"அதுதான் சரியான பேச்சு! ஆச்சாரியாரே, இனி இதரகட்சிகளுடன் ஒருசமரசத்திற்கு வரவேண்டியது தான்பாக்கி, வந்ததும் உமது மனு கவனிக்கப்படும்."

இவ்விதமானதாகத்தான், சர். கிரிப்சுக்கும சு. ராஜகோபாலாச்சாரியாருக்கும் சம்பாஷணை இருக்க முடியும்! இவ்விதம், தமது பிரிட்டிஷ்பக்தி, போர் ஆர்வம், ஆகியவற்றை விளக்க, ஆதாரங்கள் திரட்டுகிறார், அலைந்துதிரிந்து. அந்த ஆதாரங்களான, பத்திரிகைகளுடன், சர். கிரிப்சைக்கண்டு பேசுவார் ஆச்சாரியார். சைமன் சிரிப்பார்!!

"கிஷ்கிந்தையில் சகலமும் தயார்" என்று ஆச்சாரியார் கூறினதும், 'ஆமாம்' என்று சர். கிரிப்ஸ் நம்பி விடுவாரானால், அது அவருடைய அவசரப் போக்கைக் காட்டுவதாகுமேதவிர, அறிவின் பக்குவத்தைக் காட்டுவதாகாது. தயாராக வானரசேனையை வைத்துக் கொண்டிருப்பதாக ஆச்சாரியார் கூறுவதை சர். கிரிப்ஸ், நம்புமுன்னம், லிபியாவில், பர்மாவில், மலேயாவில், சிங்கப்பூரில், இரத்தஞ் சிந்தி, தங்கள் உடலங்களைக் கழுகுக்கும், கடலில் நடமாடும் சுறா மீனுக்கும், மண்ணுக்கும் இரையாகப்போட்ட வீரர்கள், ஆச்சாரியார், போர்எதிர்ப்பு செய்தபோது சிறையில் சிங்காரமாகப் படித்துக்கொண்டிருந்த போது, திரட்டப்பட்டவர் என்பதையும், இதுவரை போருக்காக நடந்த பிரசாரமும், குவிக்கப்பட்ட பணமும், ஆச்சாரியாரும்அவரது 'வானரசேனையும்' வழிமறித்து வம்புசெய்து கொண்டிருந்த நேரத்தில் இதரர்கள் செய்தது என்பதையும் கவனத்தில் வைக்கவேண்டும். இல்லையேல், அந்த இதரர்களின் கவனம், செய்நன்றி கொன்றவர்களை என்னசெய்வது! என் அவர்களுக்கு இன்னமும் உதவுவது? என்ற விபரீதமான வழியில் திரும்பிவிடவுங் கூடும்!

போர் துவக்கப்பட்டபோதே, இதரகட்சிகளுக்கு, இந்தியாவுக்கும் ஆபத்து விளயக்கூடும், ஆகையால் இந்தப்போரில் நேசநாட்டினரை முழுமனதுடன் ஆதரித்து, எதிரியின் இடும்பை முறிக்கவேண்டும் என்பது தெரிந்துவிட்டது. தெருக்கோடியில் பிடித்த 'தீ' நம்வீட்டிற்கும் வரக்கூடும் என்று தெரிந்துகொண்டவர்கள், தீ அணைக்கத் தாமாக ஓடோடி வந்தனர். அன்று தீர்த்தமாடி, திருநாமமிட்டு திருப்பல்லாண்டு பாடிக்கொண்டிருந்தவர்கள் இன்று, 'உதவிசெய்கிறோம்' என்று கூறி விட்டால், அதைக்கண்டுமலைத்துவிடுவது மடமையின் அறிகுறி. வீட்டிற்கொரு இராம இலட்சுமணர்களைக் கேட்கும் இந்த மாம்பலமா வீரர், எந்த ஞானோதயம் பெற்றதாகக் கூறுகிறாரோ, அதனை வெகுநாட்களுக்கு முன்னதாகவே இதரகட்சித் தலைவர்கள் பெற்றதனால்தான், போர் மூண்டதும், "வருகிறது ஆபத்து, வரிந்துகட்டுங்கள்கச்சையை" என்று மக்களிடம் கூறினர். அந்தநேரத்தில், வாதுஞ் சூதும் பேசியவர் ஆச்சாரியார். இன்று 'தத்தோம்' எனத் தாண்டவமாடுகிறார்! ஏன்? போரை எதிர்த்து சிறை

(11ம் பக்கம் பார்க்க)

# பிரசங்க மேடை!

(திருத்துறைப் பூண்டியில் பெரியார்)

உள்ளே இருப்பவர் நமக்கு வேண்டியவர். நம்மவர். நமதுசுகதுக்கத்தில் அக்கறைகொண்டவர். வாழ்வு தாழ்வில் நாமும் அவரும் பங்காளிகள். இனம் இருவரையும் ஒன்ருகப் பிணைக்கிறது. ஆனல்..............

* * * * *

"வாங்கோ! வாங்கோ!! சௌக்கியந்தானே? பெரியார் சுகந்தானு? ஊரிலே இருக்கிருரா, வெளியூர் போயிருக்கிருரா"

"ஊரில் இல்லை. நேற்றுஇரவு தாராபுரம்போனர். அங்கிருந்து தூத்துக்குடிபோகிருர். பிறகு பண்ருட்டி போய்விட்டு, பாலக்காடு போவார்."

"அடடா! என்ன அபாரமான உழைப்பு, அருமையான தலைவர். நீங்கள் முதலியாரவாளைக் காண வந்தீர் போலும்;'.

"ஆமாம், அவரைக் காணவே வந்திருக்கிறேன்'.

"கொஞ்சம் உட்காருங்கள், உள்ளேபோய்ப் பார்த்துவிட்டு வருகிறேன். முதலியார் பூஜைரூமுக்குப் போனர்".

"சரி, பாருங்கள், நான் வந்ததாகச் சொல்லுங்கள்".

* * * * *

ஜஸ்டிஸ் கட்சித்தலைவர்களாக உள்ள பல செல்வவான்களின் வீடுகளில் இதுபோன்ற சம்பாஷணை, வீட்டுக்காரியஸ்தராக இருக்கும் ஐயருக்கும், வீடு வாசலை மறந்து வெறிகொண்டார்போல் கட்சிக்காக உழைக்கும் தோழருக்கும் நடந்து வருகிறது. காரியஸ்தராக இருக்கும் ஐயர், காப்பி சாப்பிட்டுவிட்டு, வாயில் வெற்றிலை குழைய, மேனிவாடாது இருப்பார். கட்சித்தோழனே, காய்ந்ததலை, தேய்ந்த உடல், அழுக்குப் படிந்த ஆடையுடன் இருப்பான். ஆனல், அவன் பேசுவது, பிரசாரம் புரிவது, தனது இனத்தவரான அந்தச் சீமானுக்காக! சீமானே, அந்தச் சர்மாவைத்தான் ஆதரித்துவருவார். கட்சித்தோழன் வந்திருக்கிற செய்தியைக் கூறும் தபால் உத்தியோகமே சர்மாவிடந்தான் இருக்கும். ஐயர் இல்லாதபோது அந்தச்சீமான், பார்ப்பனர் செய்யும் அட்டூழியங்கள் இன்னின்னவைஎன்று பேசுவார், பெரியார் எவ்வளவு உழைக்கிருர் தெரியுமோ என்று கூறிப்பாராட்டுவார்; ஆனல் ஐயர் எதிரில் வந்துவிட்டால், "சாமி, வாங்கோ" என்று அழைக்கத்தவற மாட்டார். கட்சிப் பணியாற்றும் தோழனுக்கு இன எழுச்சியும், அதன் காரணமாகப் பார்ப்பனியத்தினிடம் கோபமும் இருக்கையில், அதைப்பயன்படுத்திக்கொள்ளும் சீமானுக்கு, ஏன் பார்ப்பனபக்தி குறையவில்லை? இது நமது சமுதாயம் முன்னேருமல் இருக்கிறதற்கு ஓர் முக்கிய காரணம். எத்தனையோ தொண்டர்கள், இத்தகையநிலைமை இருப்பதைக்கண்டு, மனம்நொந்து, வதங்கிப்போயினர். யூதர்களின் அக்ரமத்தைப் பற்றி ஆவேசம் எழப்பேசும் ஹிட்லர், யூதக் கன்னியரிடம் கொஞ்சி விளையாடிக்கொண்டிருந்தால், ஜெர்மன் மக்கள், ஆளுக்கொரு கல்லெடுத்து அடித்து ஹிட்லரைக் கொன்றுவிட மாட்டார்களா! நமது செல்வவான்கள் நாம் பிரசாரம் பலபுரிந்தும், இங்ஙனம் இருக்கக் காரணம் என்ன? நாம்கூறும் கோட்பாடுகள் அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றுகூறமுடியாது. அவர்களால்அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரமுடியாதபடி, அவர்களின் மனம் ஒரு போர்க்களமாக இருக்கிறது. "பெரியார் கூறுவது சரிதான். இந்தப்பார்ப்பனர் செய்வதும் அக்கிரமந்தான். ஆனல் நமதுவக்கீலோ, வரதாச்சாரியார், டாக்டரோ ஒருசர்மா, குருக்களோ கணபதி சாஸ்திரிகள், கலெக்டர் முதலிய அதிகாரிகளோ பிராமணுள். எப்படி அவர்களை விரோதித்துக்கொள்வது" என்று எண்ணுகிருர்கள். ஒருதீரமானமுடிவுக்கு வரமுடியாது இருக்கிருர்கள். அதனல்,அவர்களுக்கு நம்மிடம்அன்பு இருப்பினும் வெளிக்குக் காட்டமுடியாத நிலை ஏற்படுகிறது. இந்த விபரீத விசித்திரம் வேரறக் களைந் தெறியப்பட வேண்டும். செல்வவான்கள் மனதில் குடிகொண்டிருக்கும் **இந்துமதாபிமானம்**, அவர்களை, அக்கிரகாரத்தை ஆதரிக்கும் அண்ணல்களாக்கி விடுகின்றது. அவர்களின் மனதில், ஆழ்ந்து கிடக்கும் கருத்து, "பிராமணுமமதேவதா" எனபதேயாகும். மேலும், அவர்களிடம் பார்ப்பனர், பசப்பி, அடங்கி ஒடுங்கி நிற்பதோடு, மிகவும் அன்பும் அக்கரையுங் கொண்டவர்போல் நடிக்கின்றனர், வீணை போலிக் கௌரவத்தைக் கருதிக்கொண்டு, "ஆஹா! நம்மிடம் பார்ப்பனர் எவ்வளவு பயந்துகொள்கிருர்கள் தெரியுமோ" என்றுகூறிப் பூரிக்கும் பூமான்களும் உண்டு. தமிழன், அவர்களிடம் அடங்கிஒடுங்கி இருந்தால், அது "காக்காபிடிப்பது" என்று கேவலமாகப் பேசப்படும். பார்ப்பனர் அதுபோல் இருப்பதாகக் காட்டிக் கொண்டால், களிப்பேற்படுகிறது. இந்த மனப்பான்மை அடியோடு தொலையவேண்டும், பிறகே தமிழ்மக்கள்முன்னேறமார்க்கந்தோன்றும். இந்தவிபரீத நிலைமையைப்போக்கவே, பெரியார், திருத்துறைப் பூண்டியில் ஆவேசம் எழப் பேசுகையில், தமிழரின் தாழ்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணங்கூறிவிட்டு, "ராசாசர் ஒரு சுப்பிரமணியக் குருக்கள் காலில் மனைவியோடு விழுகிருர். வடபாதிமங்கலம் ஒரு சங்கராச்சாரி காலில் விழுகிருர். பிர்லா ஒரு கோவணாண்டி காலில் விழுகிருர். நாம் முதலில் இந்தக் கேவலமான**அடிமைத்தனத்திலே**,ஆஸ்திக்க**நிலையிருந்து** விடுதலையாகிச்சமதர்மம் பெறவேண்டும். இந்தச் சமதர்மத்திற்குஇச்சந்தர்ப்பத்தில் நன்ருக வேலைசெய்யலாம். இப்போதைய சமதர்மிகள் பெரிதும் இந்த சங்காராச்சாரி, குருக்கள், தீட்சிதர் ஆகியவர்களின்ஏஜண்டுகளே! நம்முடைய சர்க்கார்கூட ரஷியாவுக்குப் பக்கபலமாக வேலைசெய்கிறது. **ஆனல் நம் பணக்காரர் வீட்டு வாசற்படியிலே ரிஷி மகாத்மா மதம், வைதீகம். புரோகிதக் கட்டுப்பாடு என்கிறதான வேட்டை நாய்கள் கட்டப்பட்டிருக்கின்றன அந்தக் காவல்நாய்களை முதலில் விரட்டியடிக்க வேண்டும்**" என்று கூறினர்.

வேட்டை நாய்களை வீட்டில் கட்டிவைக்கவேண்டாம் என்று தமிழ்ச் செல்வர்கள் இனியேனும் தீர்மானங்கொள்ள வேண்டும். சங்காராச்சாரி முதற்கொண்டு சாதாரண சர்மாவரையில், எஸ்டேட், ஜெமீன், மிட்டா, மிராசு படைத்த தமிழ்ப்பெருங் குடிமக்களை 'சூத்திரர்' என்ற பட்டியலில் சேர்த்துவைக்கிருர்களே யொழிய வேறில்லை. செல்வம், அவர்களுக்கு,வாழ்க்கையில் இன்பத்தை நுகர உதவிசெய்கிறது. ஆனல், சாதியை அது மாற்றுவதில்லை. இன்னின்ன சாதிக்கு இவ்விவ்வளவு உரிமைகள், இன்னசாதிக்கு இன்ன சாதி கீழானது என்ற ஏற்பாட்டை, எழுநூறு வேலி நிலமோ, ஏரோப்ளேன் சவாரியோ, மாற்றுவதில்லை. சீமானக இருக்கலாம், ஆனல் சூத்திரர்என்ற சொல்லம்பு அவர்கள்மீது பாயாதிருப்பதில்லை. சிலருக்கு அந்த அம்பு வேதனையைத் தருவதில்லை! தடித்த தோலர்கள் அத்தகையவர்! ஆரியரின் புரட்டுகளுக்கு அவர்கள் அடிமைப் பட்டிருக்கும் வரையில், தமிழர்

(11ம் பக்கம் பார்க்க)

சிறுகதை.

# பாமாவின் பிரார்த்தனை.

(காப்பியன்)

சரவணமுத்து அழகிய வாலிபன். அவன் பெரிய படிப்பாளி யன்று, பெரிய அறிவாளியன்று, ஆனால் அறிவற்ற மூடனுமல்ல. களங்கமற்றவன், கவடு சூதற்றவன், பெரிய குடும்பத்திலே பிறந்தவன். அவன் தந்தை அப்புசாமிப்பிள்ளை ஒரு பெருநிலக்கிழவர். பழமைப் பித்தர். சிறுவயதிலேயே அவனுக்குப் பெற்றோர்கள் செல்லத்திருமணம் முடித்துவிட்டனர். இல்வாழ்க்கையின் சிறப்பறியாமலேயே அவனும் இல்வாழ்க்கை நடத்திவந்தான். விரும்பினபொழுது தோட்டந் துரவுக்குப்போவது, மனைவியோடு மகிழ்வது, உண்பது, உறங்குவது, எஞ்சிய நேரத்திலே ஊர்வம்பில் உழல்வது இவைகள்தான் அவனது இல்லறம்! கல்விமணமற்ற அவனது இளம் மனைவியும் ஏறக்குறைய இவனுக்கேற்றவளாகவே இருந்தாள். எனவே அவர்களது வாழ்க்கை மிகச்சாதாரணமாக, யாருக்கும் பயனற்றுத் தன்போக்கில் போய்க்கொண்டிருந்தது.

அந்த ஊர் கிராமக்கர்ணம் சேஷய்யருக்கும் சரவண முத்துவின் குடும்பத்திற்கும் நெருங்கிய பழக்கம் உண்டு. கர்ணம் சேஷய்யரின் ஆசிர்வாத பலத்தினலேயே தன்குடும்பம் செழிப்போடு வாழ்வதாக அப்புசாமிப்பிள்ளையின் எண்ணம்! அளவுக்கு மேற்பட்ட "பிராமணபக்தி" அவரது உடம்பில் ஊறித் தடிப்பேறி யிருந்தது. சேஷய்யரின் சகோதரன் கோவையில் ஒரு ஆங்கிலமருத்துவ நிலையம் நடத்திவந்தார். அவர் ஆங்கிலப்பட்டம் பெற்ற வைத்தியர். அப்புசாமிப்பிள்ளையின் குடும்பமருத்துவர் அவர்தான். அவர் பெருந்திறமையுள்ள மருத்துவரல்லர், எனினும் சேஷய்யரும், அப்புசாமிப்பிள்ளையும் அவரது புகழ்பாடும் இசைத்தட்டுகளாகவும், விளம்பரப் பிரசுரங்களாகவும் விளங்கினர்! தந்தையின் கால்வழியற்றுப் போகாமல் சரவண முத்தும் அத்திருத்தொண்டினைச் செய்தான். இவனும் சேஷய்யரின் பக்தனாகவே விளங்கினன்.

கர்ணம் வேலைக்கு மாதம் 13 வெண்பொற்காசுகள்தான் சம்பளம். என்றாலும் சேஷய்யர் பெரும் பணக்காரராக வாழ்ந்தார். ஏராளமான நிலபுலங்கள், நகைநட்டுகள், வீடுவாசல்கள் இருந்தன. பச்சரிசியுணவிலும் பட்டாடையிலும் மாறுதல் இல்லை. ஆதியிலே பிழைக்கவந்த ஆரியனுக்கு இவ்வளவும்யாரால் எங்கிருந்துவந்தன? யாருக்குத்தெரியும்? சிந்திப்பாரில்லை!

சேஷய்யருக்கு வயது 56 இருக்கும். யாக்கை நிலையாத தொன்றல்லவா? இரண்டாந்தாரமாகியஇளம் மனைவி பாமா. முதல் மனைவியின் குழந்தைகள், உற்றார் உறவினர், வீடுவாசல்கள், உத்தியோகம், கௌரவம், பெருமை, யாவற்றையும் விட்டுவிட்டு ஒருநாள் திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பால் அவர் மறைந்து போய்விட்டார்! மருத்துவர் வந்தார், உறவினர் வந்தனர், அவருக்கு உயிர்மட்டும் வரவேயில்லை!

ஏராளமான நிலபுலங்களையும் சொத்துக்களையும் இங்கு, வைத்துவிட்டு, சேஷய்யரின் குடும்பத்தைக் கோவைக்கு அழைத்துக்கொள்வது மருத்துவருக்கு உசிதமாகத் தோன்றவில்லை. எனவே குடும்பம் இங்கேயே இருக்க ஏற்பாடுசெய்துவிட்டுச் சென்றார்.

பாமா கட்டழகுவாய்ந்தமங்கை, கண்டோர் கருத்தைக் குலைக்கும் கரும்பெருங் கண்களைப்பெற்றவள், ஒல்லியான உடல், சிவந்தமேனி, சிங்காரமுகம், கொவ்வைச் செவ்வாய், முல்லைப்பற்கள், வீணைக்குரல், எடுப்பானஇளமுலைகள், அழகுக்குஅழகுசெய்வதேபோன்ற அருங்குணம்; இருந்தென்ன பயன்? எல்லாம் வியர்த்தம்; பாமா விதவையாய் விட்டாள்! அவள் வாழத் தகுதியற்றவளா?

" நாடப்படாதென்று சொல்லிவைத்தார்
நலஞ்செய் நறுங்கனியை—நாம்
தொடவும் தகாதென்று சொன்னர்
நறுந்தேன் துவைந்திடும்
பொற்குடத்தை." என்றார் மனம்புழுங்கி
அந்தப் புதுமைக் கவி சுப்புரத்தினம்;
(பாரதிதாசன்)

2

சேஷய்யருக்காகவே கர்ணம் உத்தியோகம் இருப்பதாக அவரது பக்தர்களிற்சிலர் எண்ணியிருந்தனர். "குல்லாவுக்காகத்தலை" யிருக்கிறதெனக்கூறும் கும்பலைச் சேர்ந்தவர்கள் இந்தப்புத்திசாலிகள்! சேஷய்யர் இறந்துவிட்டார். ஆனால் கர்ணம் வேலையும் அவரோடு இறந்து போகவில்லை. அந்த வேலைக்குப் போட்டி ஏற்பட்டது. 20 விண்ணப்பங்கள் சென்றன மேலதிகாரிக்கு. அவற்றிலே ஆரியரது 13. திராவிடரது 7, தான்!

ஊரில் வாழ்பவர் திராவிடக் குடிமக்கள், எனவே நமது வகுப்பாரொருவன் கர்ணம் வேலைக்கு வரக்கூடாதா? என்று சிலர் விரும்பினர். தகுதியும், செல்வாக்குமுள்ளவர்களை விண்ணப்பம் போடச்செய்தனர். விண்ணப்பதாரர்களில் சரவணமுத்தும் ஒருவன்!

சேஷய்யருக்கு ஆண் குழந்தையின் பரம்பரை பாத்தியம் கோரவழியில்லை. இருந்தும் "சேஷய்யருக்கு சித்தப்பாவின் மைத்துனன் பிள்ளைக்கு மாமா, எனக்குத்தான் உத்தியோக பாத்தியம்." என்று சொல்லிக்கொண்டு எங்கிருந்தோ முளைத்தார் ஒரு கிழவனர். அவர் தபால் இலாக்காவில் வேலைபார்த்து, ஓய்வும் பெருந்தொகைப்பணம் சர்க்கார் ஊதியமும் பெறுபவர். இருந்தும், சொற்ப சம்பள வேலையாயினும் வேறு வகுப்பாருக்கு விடக்கூடாதென்று, முரண்டியடித்துக்கொண்டு முயன்றார். யார்யாரையோ பிடித்து வேலை செய்தார். இறுதியாக வெற்றியும் பெற்றுவிட்டார், ஊரார்கட்சி தோற்றது. அநியாயம் வென்றது! அந்த ஜில்லாவுக்கே சம்பந்தமற்ற, தகுதியுமற்ற, செல்வாக்கற்ற ஒரு கிழவனருக்கு உத்தியோகம் கிடைத்தது. காரணம், மேலதிகாரி ஓர் ஆரியன்!

குடிமக்களின் இதயங்கள் குமுறின! பலவாறு பேசத்தொடங்கினர். இவற்றையறிந்தார் புதியகர்ணம் சிதம்பரய்யர். சிறிது அஞ்சினர். சூழ்ச்சியறிவுசுழன்று சுடர் வீசிற்று. வழிகண்டு பிடித்துவிட்டார்! வேலைக்கு விண்ணப்பம் போட்டிருந்த சரவணமுத்துவையும், அப்புசாமிப்பிள்ளையையும் அழைத்தார். அவர்களிடம் பக்குவமாகச் சொன்னர் "என்னபிள்ளைவாள்! எனக்கு இந்தவேலையைப் பற்றிக்கவலையில்லை. உங்களைப்பற்றி சேஷு என்னிடம் நிறையச்சொல்லியிருக்கிறான். இந்த ஊரில் உங்களைத்தவிர எனக்கு வேண்டியவர்கள் யாரிருக்கிறார்கள்? இவ்வளவு சிரமப்பட்டு இந்தவேலையைச் சரவணமுத்துக்காகத்தான் நான்வாங்கினது. அவன்என்னிடமேயிருந்து வேலைபழகட்டும், எனக்குத் துணையாகவும், சேஷுவின் குடும்பத்திற்கும் ஆதரவாகவும் இருக்கும் பாருங்கள். பின்னல் அவன்தான் இந்த ஊர்க்கர்ணம்! நானேகிழவன், எத்தனைநாள் வேலைபார்க்கப் போகிறேன்!"

(10ம் பக்கம் பார்க்க)

தொடர் கதை

# குமஸ்தாவின் பெண்தான்!

அல்லது

# கொலைகாரியின் குறிப்புகள்.

[ சௌமியன். ]

[முன்பு சோமு என்பவனைக் கொலைசெய்ததற்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட **காந்தா** தனது வரலாற்றை எழுதியிருக்கிறாள். அதனை அவளது தங்கை புருஷன் சங்கரன் பிரசுரிக்கிறான். அந்த டைரியில் உள்ளதாவது!!]

இந்த நாடகக் கம்பெனிக்காரர்களின் வண்டி எங்கள் வீட்டுப் பக்கமாக வரும்போதெல்லாம் எனக்குக் கோபந்தான் வருவது வழக்கம். விதவிதமான படங்களைக் காட்டிக்கொண்டு, ரகரகமான நோட்டீசுகளைப் போட்டுக்கொண்டு, மனதைக் கெடுத்தே விடுகிறார்கள். நெஞ்சை உருக்கும் பாடல்கள், உல்லாசமான சம்பாஷணை, உயர்தரமான நடிப்பு, அற்புதமான சீன்ஜோடிப்பு, அவர் பாடுகிறார், இவள் ஆடுவாள் என்றெல்லாம் நோட்டீஸ்போட்டு, ஆசையைக்கிளப்பி விடுகிறார்கள். எங்களிடத்திலே பணமா இருக்கிறது, நாடகத்துக்குப்போக? அப்பாவுக்கு வருவதோ மாதம் 25ரூபாய். அடுப்பிலே உலை தவறாது ஏறினாலே யோகம். இந்த இலட்சணத்திலே தம்பிக்கி வேறு, பள்ளிக்கூடச்சம்பளம் கட்டவேண்டும். அவன் படித்து விட்டு என்ன சாதிக்கப் போகிறானோ தெரியாது. சாந்தாவின் குரலே தங்கக் கம்பி போலிருக்கிறது, பாட்டு சொல்லி வைத்தால் ரம்மியமாக இருக்கும் என்று சொல்லுகிறார்கள். எனக்கோ இன்னமும் கலியா...........

நாடக வண்டிகளைப் பார்க்கக் கூடாது என்றிருந்தவள், அன்று பார்க்கவேண்டியதாயிற்று. குமஸ்தாவின் பெண்! குமஸ்தாவின் பெண்! என்று கூவினார்கள். நானும் ஒரு குமஸ்தாவின் பெண்தானே! ஆகவே நோட்டீசை வாங்கச் சொன்னேன். சாந்தா ஓடிப்போய் வாங்கிக்கொண்டு வந்தாள். கதைச் சுருக்கம் அதில் இருந்தது. அசல்எங்கள் குடும்பக் கதைதான். ஆகவே எப்படியாவது அந்த நாடகத்தைப் போய்ப்பார்க்க வேண்டும் என்று ஆசைபிறந்தது. அப்பாவிடம் சொன்னேன். அவர் என்னசெய்வார், பாபம்! "கண்ணில்லையோடி காந்தா, பெரிய பெண்ணாயிருக்கே, நோக்குத் தெரியாதோ நம்ம ஆத்துக்கஷ்டம்" என்று சொன்னார். வறுமைபிடித்து வாட்டும் நாங்கள் குடியிருக்கும் வீட்டுப்பக்கமாக, பாழாய்ப்போன சினிமா, டிராமா வண்டிகளும், பட்டுப் புடவைக்காரனும், பம்பாய் சேட்டும் ஏன்தான் வரவேண்டும்? நாசமாய்ப்போகிறவாள், எங்களை வறுமையோடாவது விட்டுவைக்கக்கூடாதா? இல்லாதவாளிடம் வருவானேன், இதுவேண்டுமா, அது வேண்டுமா என்று கேட்பானேன்? இப்படிச் சித்திரவதை நடக்கிறதே உலகிலே, சிவனே என்று அவாஅவாள், அவாவா காரியத்தைக் கவனிச்சிண்டேதானே இருக்கா? மனுஷயாமட்டுமா, தெய்வங்கூட சும்மாதான் இருக்கு.

இரண்டாம் வாரம், மூன்றும்வாரம் என்று குமஸ்தாவின்பெண் நாடகம் நடந்துகொண்டே இருந்தது. ஒவ்வொரு நாளும் எனக்கு ஓயாததொல்லை. அப்பாவுக்கும் சங்கடம். என் முகத்தைக்கண்டு அவரால் சகிக்க முடியவில்லை.

"காந்தா, நாளைக்கு ரெடியாஇரு, நாடகம் போவோம். சாந்தாவும்வரட்டும்" என்று ஒருதினம் அப்பா சொன்னார்.

"என்ன, வாலிபந்திரும்பறதோ, குடும்பம் கிடக்கிற கிடப்பிலே நாடகம் வேறேவேண்டியிருக்கோ.. இங்கேதான் நல்லதங்கா நடக்கிறதே, நாடகம் போறாராம் நாடகம்" என்று அம்மா கோபத்தோடு கூறினார்கள். வாஸ்தவந்தானே, அந்தமுக்கால் ரூபாயிருந்தால் எங்கள் குடும்பத்துக்கு எவ்வளவோ சௌகரியம்.

நாடகம், சினிமா, இவைகள் இருக்கும் உலகத்திலே பணப்பஞ்சம் ஏன் இருக்கவேண்டும்? குமஸ்தாவின்பெண் நாடகம் எவ்வளவு அருமையாக இருந்தது தெரியுமோ. என்ன அருமையாக நடிக்கிறார்கள், **T. K.** ஷண்முகம் கம்பெனியார். ராமு வேடத்திலே ஷண்முகம் நடிப்பது எல்லோருக்கும் பிடித்தது. சீதா இறந்தது கேட்டு, ராமு, சீதா! சீதா! என்று அலறிக்கொண்டு ஓடும்போது, மனது துடிதுடிக்கிறது. சீதாவாக நடிக்கும் சிறுவன், அசல் பெண்போல்தான் தெரிகிறான். சீதாவின் தங்கை சரசுவாக **M. S.** திரௌபதி என்ற பெண், ஜோராக நடிக்கிறாள். "நீங்க மீராசுதார், உங்காத்துலே விதவிதமாக குடங்கள் இருக்கும், எங்களுக்கு இருப்பது இந்த ஒரு குடந்தான்" என்று சரசு கூறும்போது கசியாதவர்கள் இல்லை. குமஸ்தாவாக நடிப்பவர், ரொம்ப நன்றாகநடித்தார். ஆமாம், யாரைச் சொல்லி யாரைச்சொல்லாமல் விடுகிறது. நீங்கள்பார்க்கவேண்டும், அவ்வளவுதான், நான் எவ்வளவு சொன்னாலும் போதாது, புரியாது போங்கள்.

கதை தெரியுமோ, முதல்தரமானது. ஒரே ஒரு குமாஸ்தா-எங்கப்பாபோல. அவருக்கு இரண்டு பெண்கள் ஒரு பிள்ளை. எங்காத்திலே நாங்க இருப்பதுபோல, சீதா மூத்தவள், நல்ல அழகி, சரசா இளையவள், எங்க சாந்தா போல. அழகு, குணம், எல்லாம் என தங்கை போலத்தான். வறுமைப் பிடுங்கித்தின்கிறது, எங்காத்திலே இருக்கிற கஷ்டமேதான். சீதாவுக்கு ராமுஎன்ற ஒருவன்மேலே ஆசை. அவனுக்கோ கோயில் குளம், பூஜைபுனஸ்காரம் முதலியவற்றிலே ஆசை. அவளையும் கலியாணம் செய்துகொண்டு, அவன்கோயிலுக்குப் போவதை எந்தக் கடவுள் வேண்டாமென்று கூறினாரோ தெரியவில்லை, அவன், கலியாணமே கூடாது என்று கூறிவிட்டான். எந்தக்கோயிலிலும் பிள்ளையார் கோயில் தவிர-தேவி இருக்கே, நாம் ஏன் கலியாணம் வேண்டாம் என்று சொல்லவேண்டும் என்று ராமு யோசிக்கவில்லை. யோசிக்க நேரமேது? சதா தேவாரமும் திருவாசகமும், படிக்கவும், குளித்து பூஜைசெய்யவும் நேரம் போய்விடுகிறது. வரதட்சணைதான் ஒரு சாபக்கேடு இருக்கிறதே எங்க குலத்திலே. சீதாவுக்குப் பணமேது. ஒருகிழவனிடம் தள்ளுகிறார்கள். அவன் சாகிறான். மொட்டச்சியாகிறாள் சீதா. பிறகு அந்த ஊர் மிராசுதாரன், சீதாவைக்கெடுக்க வருகிறான். எவ்வளவோ கஷ்டம். குமாஸ்தா காலமாகிறார். சீதா தற்கொலை செய்துகொள்கிறாள். பிறகு ராமு சரசாவைக் காப்பாற்றுகிறான். அவளை ஒரு கரம்புக்காரனுக்குக்கலியாணம் செய்ய ஏற்பாடாகிறது. கலியாணப் பந்தலிலேயே சண்டை. "போடாபோ! சரசாவை நானே கலியாணம்செய்து கொள்கிறேன்" என்று ராமு சொல்லிவிட்டு, கலியாணம் செய்துகொள்கிறான். சரசா நிம்மதியாக வாழ்கிறாள். இது கதை. பார்த்தால் தான் தெரியும் இதிலே உள்ள ருசி.

(8ம் பக்கம் பார்க்க)

" கஞ்சி நிதி லிமிடெட் "
**காஞ்சீபுரம்.**
மேற்படி பாங்கியில், ரூபா 1000/, 500/, 250/, 100/, 50/- ஆகிய தொகைகளில் ஏலச்சீட்டுகள் பிரதிமாதமும் நடந்துவருகின்றன. சந்தாதாரர்களாகச் சேர விரும்புவோர் விபரங்களுக்கு நேரிலோ அல்லது கடித மூலமோ எழுதித் தெரிந்து கொள்ளவும். **K.R. சாரி, B.A.**
செகிரிட்டரி.

# திராவிடநாடு

ஞாயிறு] 22—3—42 [காஞ்சீ.

## " ஹிந்துஸ்தான் ஹமாரா! "

'**பா**கிஸ்தானை நல்லறிவு படைத்தவர்கள் வெறுத்துத்தள்ளிவிட்டனர். பஞ்சாப், வங்காளம் ஆகிய இடங்களிலுள்ள முஸ்லீம்கள்கூட பாகிஸ்தானை நிராகரித்துவிட்டனர். பாகிஸ்தானால் பயன் இல்லை!' தெரிந்ததா?

இது தெரியாமல் இத்தனை நாட்களாக இருந்துவிட்டோம்! இதோ, தோழர் சத்தியமூர்த்தியார் புதுடில்லி நகரில் மார்ச் 18ந்தேதி, இந்த அற்புதமான உண்மைகளைக்கூறியுள்ளார். பாகிஸ்தானை முஸ்லீம்கள் நிராகரித்து விட்டனராம்!

தீர்மானங்கள் உண்டா? கிடையாது! லீக் தனது கொள்கையை விட்டுவிட்டதா? இல்லை! ஜனாப் ஜின்னா, வார்தாவுக்கு அடிமையானாரா? ஒருக்காலும் இல்லை!

எனினும் மூர்த்தியார், பெயர் **சத்தியம்** என்றிருக்கும்போது, நமக்கென்னபயம் என்று துணிந்து கூறுகிறார், பாகிஸ்தானை வங்க, பாஞ்சால முஸ்லீம்கள் நிராகரித்துவிட்டனர் என்று. என்ன துணிவு! எவ்வளவு பதட்டம்! நிராகரித்துவிட்டனராம்! இழந்த கண்களை மீண்டும் பெற்றவன் எனக்கு இவை வேண்டாம் என நிராகரிப்பான் போலும்! வலிய விளைந்த சுகம், புதையல் எடுத்த தனம், நள்ளிரவில் ஒளி, நட்டாற்றில்தோணி, நோய்க்கு மருந்து, நொந்தவனுக்கு ஆறுதல், இவை கிடைக்கப்பெற்றோர், வேண்டாமென்று கூறி நிராகரிப்பரோ! வங்க முஸ்லீம்களும், பாஞ்சாலத்து இஸ்லாமியரும் பாகிஸ்தானை நிராகரித்துவிட்டனர் என்று பச்சைப்புளுகு பேசும் பார்ப்பனத்தலைவர், யாரை ஏய்க்க இங்கனம் கூறுகிறார்!

எப்படி நிராகரிப்பார்கள்? அந்த வங்க, பாஞ்சால முஸ்லீம்களுக்கு, கண்ணும்கருத்தும் இல்லையா? சிந்து மாகாணத்தை வென்ற **முஹமத் பின் காசீம்** எனும் வாலிப வீரனின் சரிதத்தை மறப்பரா? **கோரி, கஜனி, கில்ஜி. லோடி** வம்ச சுல்தான்கள் ஆண்ட தரணியில், இன்று, கிளிமார்க், குயில்மார்க், 'பீடிகளைச் சுற்றும் பிழைப்பிலும், பில்லை சேவகமும், பிடிஆள் உத்யோகமும், இல்லையேல், காந்தியாருக்குச் சாமரம் வீசும் 'கண்ணியமான' வேலையிலும் ஈடுபட்டுக் கொண்டு, வர்ணாஸ்ம வல்லரசின்முன், வளைந்த முதுகினராய், இளைத்தமனத்தினராய், துடிக்கதாசராய் இருக்கவா, அவர்கள் விரும்புவர்? **அலாவுதீன்கில்ஜி** எனும் அஞ்சா நெஞ்சன், அணிவகுத்த பட்டாளங்களைத் தலைமை தாங்கி, தில்லியிலிருந்து துவங்கி, ஒவ்வோர் சிற்றரசனைகப் பணியவைத்து, மண்டலங்களைப் பிடித்து, சென்றவிடமெங்கும் வெற்றிக்கொடி நாட்டி, மதுரையையும் தாண்டி முன்னேறி, **காயல்பட்டிணம்** வரை புகுந்து மீண்ட, **மாலிக்கபூர்** என்ற வீரத்தலைவரின் வெற்றி வரலாறுகளை அவர்கள் மறந்துவிடுவார்களா?

சரிதம் பயில அவர்களுக்கு நேரமும் வசதியும் கிடையாது போகலாம். ஆம்! இன்று அவர்களுள்ள ஏழ்மை நிலையில், அவை கிடைப்பதுமில்லை. ஆனால், அவர்களின் மூதாதையர், கட்டியகோட்டை கொத்தளங்கள், காலத்தால் கலமாக்கப்பட்டிருப்பினும், காண்போரின் கலமானகருத்தையும் கனமாக்குமே! அடிமையாக இருந்து அரசனான **குத்புதீன்** அன்று எழுப்பிய **குதுப்மினார்** இன்று, அரசியல் ஆணவத்தால் கண்மங்கிக்கிடக்கும் மூர்த்தியாரின் கண்களுக்குந்தோன்றுமே! அதனை இஸ்லாமியர் மறப்பதெப்படிமுடியும்? மேதினியெங்கும் ஜோதி வீசும் புகழுடன் விளங்கி, ஆரிய இதிகாசவர்ணனைகளையும்வெட்கமுறச்செய்யும்வனப்புப் பொருந்திய **தாஜ்மஹாலை** க்கண்டபின்னர், தாசர்களாக வாழ அவர்கள் துணியமுடியுமா?

டில்லியில்நின்றுகொண்டு தோழர் சத்தியமூர்த்தி இங்கனம் பேசினது கேட்க, நாம் பெருவியப்படைகிறோம். வியப்புமட்டுமல்ல, திடுக்கிடுகிறோம், அலைச்சல் இவ்வளவு அதிகமாக அவரது அறிவைச் சூறையாடி விட்டிருக்கும் என்று நாம் எதிர்பார்க்கவேயில்லை.

வங்க முதல் மந்திரி மௌலவி பஜுலுல்ஹக் ஜனாப் ஜின்னாவுக்கு விரோதமாகக் கிளம்பினார் என்பதுண்மையே. ஆனால், எதன் பொருட்டு? பாகிஸ்தானை எதிர்த்தா? இல்லை! அகில இந்திய முஸ்லீம் லீக் மாநாடு, பாகிஸ்தான் தீர்மானத்தை நிறைவேற்றுகையில், கனம். ஹக் அதை ஆதரித்தார், பின்னர், அனேக முறை ஆதரித்துள்ளார். அவருடைய மனதில் பதவிக்கும் பக்திக்கும் இடையே மூண்ட போரில், அவர் பதவியின் பக்கம் நின்றுவிட்டார். சர். சிகந்தரும், பாகிஸ்தானை நிராகரித்தார் என்று எவரும் கூற முடியாது. லீக் கட்டளையை மதித்து, வைசிராய் பாதுகாப்பு சபையில் அவருக்களிக்கப்பட்ட பதவியையும் வேண்டாம் என வெறுத் தொதுக்கிய பாஞ்சாலவீரர், பாகிஸ்தானை எதிர்ப்பவரல்ல. பாபர், அக்பர், அவுரங்கசீப், போன்ற மன்னாதி மன்னர்கள், அஹமத்ஷா அப்தாபலி போன்ற அஞ்சா நெஞ்சு படைத்த தலைவர்கள், ஆகிய யாரை மறப்பர்? ஏன் நிராகரிப்பர் அவர்கள் ஆண்ட தரணியை, மீண்டும், பிறைக் கொடியின் பெருமித ஆட்சியின் கீழ்க் கொண்டுவரும் பாகிஸ்தானை! நல்லறிவுள்ளவர்கள் பாகிஸ்தானை நிராகரிப்பர் என்றுரைப்பது சாதாரண அறிவுக்கும் பொருந்தாத பேச்சு. நல்லறிவு என்பதற்கு, ஆரிய அறிவு என்று மூர்த்தியார் பொருள் கொள்கிறார் போலும்! ஆரிய அறிவு, அகில, உலகிலும் காணற்கரியது. காணாத லோகங்களைக் கணக் கெடுக்கும், ஆபாசத்தை அருள் என்றுரைக்கும், ஜாதிச் சனியனை சாத்திரத் தீர்ப்பென்றுரைக்கும். கோத்திரம் குலம் என்று கோள் மூட்டும், கோயில் குளத்தைக் காட்டி ஏமாற்றும், திதி திருவிழா என்றுரைத்து திமிர் வாழ்வுக்கு வழி தேடும், தேவர் என்றும் கின்னரர் என்றும் கூறி தெகிடுதத்தம் பேசும், ஆரிய அறிவு இதில் முதல் தரமானது. ஈடு எதிர்ப்பில்லாதது! ஆனால் சுய அறிவுள்ள எந்த முஸ்லீமும் பாகிஸ்தானை எதிர்க்க மாட்டாரென்பதுறுதி. சுந்தர விலாசத்துக் கந்தரனுபூதியார், விந்தையான சிந்தனையை விட்டுவிடக் கோருகிறோம். பிடிவாதஞ்செய்வது, பெரு நெருப்புடன் விளையாடும் பேதையின் நிலைக்கு அவரைக் கொண்டு போய்ச் சேர்க்கும்.

"ஜனாப் ஜின்னா தேசாபிமானி! அவர் நாட்டைக் காட்டிக் கொடுக்கமாட்டார்! நெருக்கடியான இந்த நேரத்தில் அவர் முன் வந்து நாட்டை நடத்திச் செல்ல

வேண்டும்" என்று தோழர் சத்தியமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார். பாகிஸ்தானை எதிர்த்துப் பேசிவிட்டு, அதை ஆதரிப்பவர் அறிவிலிகள் என்ற பொருள்பட அகந்தையைக் கக்கிவிட்டு, பிறகு, ஜனுப் ஜின்னாவை, "அரசே! வாரீர்! அண்ணலே வாரீர்!" என்று அழைப்பது, விஷமங்கலந்த வினயம்!

"கர்னல் அமெரியோ மிஸ்டர் சர்ச்சிலோ அவர்களுக்குப் பாகிஸ்தானைத் தரமுடியாது" என்று மூர்த்தியார் கூறுகிறார். உண்மை! அந்த பிரிட்டிஷ் பிரமுகர்கள், எப்படிப் பாகிஸ்தானைத் தரமுடியாதோ அதுபோலவே சுயராஜ்யத்தையுந்தர முடியாது! நாட்டுக்கு இனி, எதிர் காலத்தில் எத்தகைய நிலை ஏற்படும் என்பது இங்குள்ளவர்கள் கூடிக்கலந்து பேசி, செய்யும் முடிவைப் பொறுத்திருக்கிறதே யொழிய, கையைக் காட்டியோ, கண்ணைக்காட்டியோ, மிரட்டியோ மயக்கியோ, பிரிட்டிஷாரிடம் பெறும் காகிதச்சுருணையைப் பொருத்தில்லை என்பதைக் கனபாடிகளின் பிரதிநிதி கவனத்திலிருக்கட்டும்.

போர்முடிந்தபின்னர் இந்தியாவுக்குப்பாகிஸ்தான் திராவிடஸ்தான் திட்டங்களை அடிப்படையாகக்கொண்ட புது அரசியல் திட்டம் வகுக்கப்பட வேண்டும். போர்முடியுமட்டும், அதுபற்றிய விவாதத்தைநிறுத்திவிட்டு, போர் சம்பந்தமாக சகலகட்சிகளும் ஒன்றுபட்டுழைக்கக் கூடிய ஒரு திட்டம் ஏற்படுத்த வேண்டும். இதனை டில்லி சட்டசபைக் கூட்டத்தில் 17ந் தேதி, **நவாப்ஸாடா லியாகத் அலிகான்,** "பிரிட்டனுக்குத் தொந்தரவு ஏற்பட்டுள்ள இந்தச் சமயத்தில், அதனிடமிருந்து வசதிகளைப் பிடுங்கிக்கொள்ள லீக் ஒருநாளும் உத்தேசிக்கவில்லை. வருங்கால அரசியல் திட்டத்துக்குப்பாதகமில்லாமல் தற்போதைய அரசியல் திட்டத்தின்படி அரசாங்கத்தில் உண்மையான, சரியான பங்குகிடைக்குமானல், முஸ்லீம்லீக் இந்தியப் பாதுகாப்பின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு தனியாகவோ, மற்றக்கட்சிகளுடன் சேர்ந்தோ ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது" என்றுகூறிவிட்டு, வருங்கால அரசியல் திட்டத்திலே பாகிஸ்தான் மட்டுமல்ல, திராவிடஸ்தானும் இடம்பெற வேண்டுமென்பதை எடுத்துரைத்துள்ளார். **'திராவிடஸ்தான் கோரிக்கையை லீக்தலைவர் ஆதரிப்பதாக சென்றவருடம் சென்னையில் கூறியுள்ளார்"** என்று **லியாகத் அலிகான்** கூறினார். சென்னைப் பார்ப்பனப்பத்திரிகாசிரியர்களும், பார்ப்பனத் தலைவர்களும், திராவிடஸ்தான் கிளர்ச்சியை மௌனத்தால் முறியடிக்கலாம் என்று எண்ணினர். இதோ, டில்லி சட்டசபையில், கிளம்பிவிட்டது, திராவிட நாட்டுப் பிரிவினையின் எதிரொலி! இந்தஅரிய சந்தர்ப்பத்தில், திராவிடருக்காக, லியாகத் அலிகான் செய்த சேவையைத் திராவிடநாடு மறக்காது. திராவிடர் சார்பாக நாம் அவரை மனமாரப் பாராட்டுகிறோம்.

இதே டில்லியில், கடந்த ஜெர்மன் சண்டையின் போது, 1918ம் ஆண்டு மகாகனம் சீனுவாசசாஸ்திரியார் சட்டசபையில் பேசுகையில், "**பார்ப்பனரல்லாத மக்கள் பிரிட்டிஷ் ஆட்சிபோய் பார்ப்பனராட்சி வருவதானல், பார்ப்பனராட்சியின் கீழ் இருக்க இசைவார்கள்.**" என்று பேசினர்.

மகாகனத்தின் மனப்பான்மையையும் லியாகத்தின் மனப்போக்கையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

இப்போது அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டியது, போரை வெற்றிகரமாக எப்படி நடத்துவது என்பதாகும். இதற்கு, போர் ஆதரவைப்பூரணமாகத் திரட்ட லீகும், நமது கட்சியும் தயார்! திரட்டிக்கொண்டும் வந்திருக்கிறோம். இதுவரை 'தெருவில் திரிந்தவர்கள்' இப்போது, தாங்களும் அந்தத்திருத்தொண்டில் பங்கு கொள்ளவருவதானல், தாராளமாக வரட்டும், ஆனல் அதற்காக, மற்றவர்களின் உரிமைகளைத் தன்னிடம் அடகுவைக்க வேண்டுமென்று பிரிட்டிஷாரை வற்புறுத்தினல், அது கொடுமை என்போம். நமது உரிமைகளை அங்கனம் அடகுவைக்க பிரிட்டிஷாருக்கு உரிமைகிடையாது. அவசரமான தேவைக்காக, குடும்பத்தைப் பரிபாலிக்கும் கார்டியன், 'சொத்துக்களை' சொந்த உபயோகத்துக்காக அடகுவைத்தாலோ விற்றாலோ, அஃது கடுங்குற்றமாகும். அத்தகைய நடவடிக்கை செல்லாது என்று மறுத்துரைக்க சொத்துக்குரியவர்களுக்குச் சட்டப்படி உரிமையுண்டு. சாதாரணச் சொத்துக்கே இத்தகைய நிபந்தனைகள் என்றால், பலகோடிமக்களின் எதிர்கால வாழ்க்கையை துச்சமாக மதித்து 'துரைமார்' ஏதோ செய்வார்களாயின், அதுநம்மைக் கட்டுப்படுத்தாது என்பதை எடுத்துரைத்து, நமது சொத்துக்களை நாம்மீட்டுக்கொள்ள நமக்கு தைரியமும் உண்டு, நம்பிக்கையும் உண்டு. போர் முடிந்ததும், நாஜிவசம் சிக்கிய நாடுகள் விடுதலை பெற்று, அதே நேரத்தில் இங்கே நாம், ஓர்வர்ணாஸ்ரம வல்லரசுக்குத் தட்சணையாகத் தரப்பட்டுள்ளோம் என்பதை உணர நேரிட்டால், அது உள்நாட்டிலே, இதுவரை ஏற்பட்டிராத கொந்தளிப்பை உண்டாக்கும் என்பது திண்ணம்.

"பாகிஸ்தானுக்கு இணங்கினல், இந்துக்களில் சிலர் ஜப்பானியருடன் சேர்ந்துவிடுவர்" ஆகவே நாம் பாகிஸ்தானை ஆதரிக்கக்கூடாது" என்றுலண்டன், **நியூ ஸ்டேட்ஸ்மன் அண்நேஷன்** ஓர் நூதன வாதம்புரிகிறது. அந்தவாதம் நமக்கு விலாநோகும் சிரிப்பைத்தருகிறது. பாகிஸ்தானை ஆதரித்தால் இந்துக்கள் ஜப்பானியரை ஆதரிப்பர் என்று வாதமிடுகிறதே இந்த ஏடு, பாகிஸ்தானை மறுத்தால் முஸ்லீம்கள் ஜப்பானியருடன் சேர்ந்துகொள்ளக்கூடும் என்று வேறொருவர் வாதிட முன்வந்தால், இந்தஏடு என்ன பதில்கூறுமோ தெரியவில்லை! லண்டனில் நாஜி வெடிகுண்டுகள் கட்டிடங்களை மட்டுமே இடித்தன என்று படித்தோம், சிலஇடங்களில், அறிவையும் அவை இடித்துவிட்டன போலும். நாட்டு நலம் கோருவோர், நாளைய அரசியலை நமக்குள் முடித்துக்கொள்வோம் என்று முதலில் தீர்மானித்துவிட்டு, இன்றைய ஆபத்திலிருந்து தப்ப, யாவரும் ஒன்று சேர்ந்துழைக்கத் திட்டமிடவேண்டும். அதை விட்டு, பாகிஸ்தான் பயனற்றது என்று பேசினல் உனது சுயராஜ்யம் சூதானது என்று பதில் கிடைக்கும், வாதம் வளரும். பிடிவாதம் மிகக்கொடிய நோய்! மூர்த்தியாரின் பேச்சு அதன் சேட்டைதான் என்று கருதுகிறோம்.

இந்தியாவைப் பாதுகாக்க வேண்டியது, நமது மகத்தான கடமை. இதனை நாம் செய்யத் தவறினல், பிறகு சுதந்திரம் என்ற சொல்லை நாம் வாயால் உச்சரிக்க ஒரு நூற்றாண்டு பிடிக்கும்.

எனவேதான், ஆபத்தான இந்தவேளையில், எதிர்கால அரசியல் திட்டம் பற்றிய முடிவுகளைச் செய்யாமல், போரில் நாம் வெற்றி பெறும்வழி வகுக்க வேண்டும் என்று கூறுகிறோம். காங்கிரசார், நெருக்கடியைச் சாக்காக வைத்துக்கொண்டு எதிர்காலத் திட்டத்தை இப்போது ஏற்படுத்த முனைந்தால், இதனை மனதில் இறுத்தட்டும். மறப்பதுஆபத்துஎன்றுஎச்சரிக்கிறோம்.

இஸ்லாமிய உலகுக்கு புத்துணர்ச்சியூட்டிய கவி மர்ஹூம் இக்பால், "**ஹிந்துஸ்தான் அமாரா!**" என்று பாடினர். இஸ்லாமியர் அதனை மறக்கமுடியாது. "**தமிழ் நாடு தமிழர்க்குத் தமிழர் நாட்டில் சலிமாக்கவந்துள்ள ஆரியர்கள் நமரல்லர்**" என்று நமது கவி பாரதிதாசன் கூறியுள்ளார். நாம் மகிழ்ச்சியோடு இருந்த நேரத்திலல்ல, மன்னன் பன்னீர்ச் செல்வனை ஓமான் கடலுக்குப் பறிகொடுத்துவிட்டு, உள்ளம் ஒடிந்துகிடந்த வேளையில்! அன்று சோகத்தையும் கவி தந்த சொல்லையும் கலந்துநெஞ்சிலிட்டோம்! நாம்கொண்டுள்ள உறுதியை, மூர்த்தியார் அறியமாட்டார். அது அவர் குற்றமுமல்ல! இன இயல்பு!!

# தமிழர் இயக்கமும் தமிழர் பண்பும்

(பண்டித எஸ். எஸ். ஆனந்தம் எழுதுவது)

ஓர்கருத்தினை நிறைவேற்றுவதற்கு அக்கருத்துடைய பலரும் ஒருங்குகூடி முயற்சி செய்தல் இன்றியமையாததாகும். தமிழ்மக்கள் தங்கள் முன்னேற்றத்திற்காக ஒற்றுமைப்பட்டு முயலுதல் நெருக்கடியான இக்காலத்தில் மிகமிக அவசியமாகும். ஏனெனில் உலகத்திலுள்ள நாகரீகம்படைத்த மக்கள் வகையார் பலருள்ளும் தமிழ்மக்களே சாதிப்பிரிவால் அன்பும் ஒற்றுமையும் இல்லாமல் சீர்கேடான நிலையில் பிற்போக்குள்ளவர்களாய் மனிதப் பதராய் இருக்கின்றார்கள். அவர்கள் முற்போக்கு அடையாவிட்டால் தமிழ்மொழியும், தமிழ்நாகரீகமும், தமிழ்நாடும் நிலைபெறமாட்டா. மிகப்பழமையான மொழிகளுள் சிறந்ததாகிய தமிழ் பிறபழைய மொழிகள் வழக்கில்லாது ஒழிந்து போகவும் தமிழ் இன்றும் பேச்சுவழக்கில் இருந்துகொண்டிருக்கிறது. தமிழ் இயற்கைச்சொல் நயமுடையதாய் மூச்சுச் செட்டுடையதாயிருத்தலின் இயற்கை மொழி என்பர் அறிஞர். மேலும் சுருக்கமாய், எளிதாய், வழங்குதற்குரிய ஓசைகளையுடையது தமிழ். செவ்வையாக அமைந்த இலக்கணமும், மக்கள் வாழ்க்கையை உயர்ந்தமுறையில் படம்பிடித்துக்காட்டும் பண்டைய இலக்கிய முடையது தமிழ். அருட்பாடல்கள் நிறைந்தது தமிழ். தன்னலங்கருதாது பொது நன்மையை நாடும் உயர்ந்த ஒழுக்கமும், பகைவருக்குப் பின்வாங்காத வீரமும், நீதிநிறைந்த அரசியல் கொள்கையும், பொய் வேடமும் ஆரவாரச் சடங்கும் கலவாத உள்ளன்பும், உண்மைத்திறமும்பொருந்திய காதல்ஒழுக்கமும் சேர்ந்துள்ளது தமிழ்நாகரீகம்.

**தமிழர் யார்?**

தமிழ்மொழியும் தமிழ்நாகரீகமும் உலகத்திற்கு நன்மை பயக்கும் விழுமிய செல்வங்களுள் வைத்துப் போற்றப்படும் அழியாச் சிறப்புடையன. அவற்றைப் பேணவல்லவர்கள் தமிழைத் தாய்மொழியாக உடையவர்களும், தமிழ்நாகரீகத்தின் தனிஉயர்வை உணர்ந்தவர்களுமேயாவர்.

அவர்களே தமிழர்எனப் படுதற்குரியவர்கள். உண்மைத் தமிழர் தமிழ்ப்பற்றுடைய யாவரிடமும் சாதிசமய வேறுபாடு பாராட்டுவாரல்லர். உண்மைத் தமிழர் ஒற்றுமைப்பட்டு வாழ்தல் தமிழ் நாகரீகம் பேணுவதற்குஅடிப்படையாகும். பிறமொழியையும் பிறநாகரீகத்தையும் பெரிதாகப் பேணுபவர்கள் தமிழ் நூற்சிறப்புக்களை ஒருவாறு பாராட்டினாலும், தமிழின் உண்மையை உயர்வைப்போற்றமாட்டார்கள். உலகமக்கள் எல்லாரையும் ஒரே குடும்பமாகக் கருதல் நன்றே. தமிழ் பண்டைநூற்பயிற்சியால் அக்கொள்கை வலியுறும். (தொடரும்)

## குமஸ்தாவின் பெண்தான்!

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சீதாவை, ஒரு கிழவனுக்குக் கலியாணம்செய்து கொடுக்கும் சீன் நடக்கும்போது, என்கதி என்னுகுமோ என்று எண்ணி, கண்களில் நீர்ததும்ப, அப்பாவை நோக்கினேன். அவர்மனமும் வேதனையில் இருந்ததுபோல் தெரிந்தது. துக்கம்தொண்டையை அடைத்துக்கொண்டதால், அப்பா, கம்மலான குரலுடன், 'பாவி! கிளியைவளர்த்துப் பூனையிடம் கொடுத்தானே' என்று குமஸ்தாவைத்திட்டினார். என் மனதில் ஒரு ஆனந்தம் உண்டாயிற்று. அப்பா என்ன கஷ்டம் வந்தாலும், சீதாவைக் கிழவனுக்குக் கொடுத்ததைப்போல என்னைக்கலியாணம் செய்துவிட மாட்டார்கள் என்ற தைரியம் பிறந்தது. இப்படிப்பட்ட நாடகங்களைப் பார்த்த பிறகாவது, நம்மகுலத்திலேயிருந்து இந்த வரதட்சணைப் பேயை ஓட்டிவிடவேண்டாமோ. கதை முடிந்தது, வீட்டுக்குவந்தோம். அம்மாவிடம் கதையைச் சொன்னபோது, அவள், 'ஆமாம்! அந்த ஏழைப் பிராமணன் வேறே என்ன செய்வான்? எத்தனை நாளைக்கு சீதாவை வீட்டிலே வைத்திருக்க முடியும். கிழமோ குருடோ எதுவோ ஒன்றின் தலையில் கட்டித்தானே தீர வேண்டும்'' என்றுகூறினாள். "சீ! முட்டாளே! அவன் செய்த காரியம் மகா பிசகு.'' என்று அப்பா வாதாடினார். சரசா தூங்கிவிட்டாள். எனக்கோ அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நடந்த பேச்சு, பயத்தை உண்டாக்கிவிட்டது. என்னை அழைத்துக்கொண்டுபோக படுகிழவன் வருவதாகவும், நான் பயந்து கொண்டு அப்பாவிடம் ஓடுவது போலவும் அம்மா வழியிலே நின்றுகொண்டு, 'உன்புருஷனிடம் உனக்கென்னபயம்' என்று கூறுவது போலவும் கனவு கண்டேன். மறுதினம் காலையில் எழுந்ததும், வாசலில் நின்றுகொண்டு தெருவை நோக்கினேன். எதிர் வீட்டில் ஒரு சுந்தர வாலிபன் நின்றுகொண்டிருக்கக் கண்டேன்.

[தொடரும்]

## திருவத்திபுரத்தில் ஜஸ்டிஸ் கூட்டம்

வடாற்காடு ஜில்லா திருவத்திபுரத்தில் 23—3—42 ஜஸ்டிஸ் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் C. N. அண்ணாத்துரை. T. P. S. பொன்னப்பன் ஆகியோர் பேசுவர்.

## மகிழ்ச்சிக்குரியது!

காஞ்சீபுரத்தில்

கௌரவ பென்ச்சு மாஜிஸ்ட்ரேட்டுகளாக,

திருவாளர்கள்,

D. V. D. முனுசாமிசா, K. R. விஸ்வநாதமுதலியார் P. D. அண்ணியப்பமுதலியார், K.S. கெம்புசெட்டியார் S. எல்லப்ப முதலியார், திருவாட்டி V. T. ஆதிலட்சுமி அம்மையார் ஆகியோர், சர்க்காரால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படியார்களை நாம் வாழ்த்துகிறோம்.
தக்கோருக்கு இப் பதவிகளை அளித்த
சர்க்காரையும் பாராட்டுகிறோம்.

## டி. கே. எஸ். சகோதரர்கள் குடந்தையில் நாடக ஆரம்ப விழா

குடந்தை, மார்ச், 18 (நமது நிருபர்)

இவ்வூர் வாணிவிலாச தியேட்டரில் 14—3—42 அன்று "முத்தமிழ் கலா வித்வரத்ன'' டி. கே. எஸ். சகோதரர்களின் மதுரை பால ஷண்முகானந்த சபையாரின் "சிவலீலா'' நாடக ஆரம்பவிழா. திரு பி. எஸ். விஸ்வநாதன் எம். ஏ., ஐ. சி. எஸ். அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. நகர பிரபலஸ்தர்கள் பலர் விஜயம்செய்திருந்தனர். நகர சபைத் தலைவர் அவர்கள் கம்பெனியாரை அறிமுகப்படுத்தி "சிவலீலா'' வின் சிறப்பையும், டி. கே. எஸ் சகோதரர்கள் நாடக உலகத்திற்கு செய்யும் சேவையையும் பாராட்டிப்பேசினார். சினிமா ஆஸ்யநடிகர் திரு கே. சாரங்கபாணி அவர்கள் டி. கே. எஸ். சகோதரர்களுக்கு மலர் மாலைகள் சூட்டினார். சபையின்சார்பில் திரு டி. கே. ஷண்முகம் அவர்கள் தலைவருக்கும், நகர சபைத்தலைவருக்கும் மலர்மாலைகள் சூட்டி வந்தனோபசாரம் கூறினார்.

# ஜஸ்டிஸ் வாலிபர் மாகாண மாநாடு.

## திருச்சி விசுவநாதம் தேன்மொழிகள்.

## உற்சாகமான நடவடிக்கைகள்.

(நமது நிருபர்) சென்னை 16-3-42.

ஜஸ்டிஸ் வாலிபர் மாகாண மாநாடு சென்னையில 15—3—42 ஞாயிற்றுக்கிழமை காலே 8-30 மணிக்கு சென்னை, செயின்ட்மேரீஸ் ஹாலில், விமரிசையாக நடந்தது. தமிழகத்திலிருந்து ஏராளமான பிரதிநிதிகள் வந்திருந்தனர். உள்ளூர் ஜஸ்டிஸ் வாலிபர்களும், தலைவர்களும் வந்திருந்தனர். திருநெல்வேலி தோழர் C. D. நாயகம், தோழர் நல்லசிவம்பிள்ளை, தோழர்கள் திருச்சி T. P. வேதாசலம், கடலூர் தெய்வசிகாமணி, விருத்தாசலம் முனுசாமி, சேலம் ஜெகதீச செட்டியார், ரோஸ் அருணாசலம், வேலூர் பெரியசாமிமுதலியார், திருநாவுக்கரசு, கோவிந்தராஜுலு நாயுடு திருவாரூர் தோழர் T. N. ராமன், காஞ்சிபுரம் தோழர்கள் A.K. தங்கவேலர், ஈழத்தடிகள், கன்னிவேல், மற்றும் வடாற்காடு செங்கல்பட்டு, தஞ்சைமுதலிய பல பகுதிகளிலிருந்து பல பிரதிநிதிகளும், சென்னை திருவொற்றியூர் ஷண்முகம் பிள்ளை, தோழர்கள் சுந்தரராவ் நாயுடு, மதனகோபால் நாயுடு, கோதண்டராம முதலியார், T. S. நடராசப்பிள்ளை,. P. பாலசுப்பிரமணியம், மோகனசுந்தரம், N. V. நடராசன், சிவரத்தினம், முருகேசன், நடேசமுதலியார், சிவஞானம், டாக்டர் தருமாம்பாளம்மாள், பார்வதியம்மாள், உள்ளிட்ட உள்ளூர் ஜஸ்டிஸ்கட்சியினர்கள் வந்திருந்தனர்.

தோழர் N. V. நடராசன் கேட்டுக் கொண்டதற்கிணங்க தோழர் P. பாலசுப்பிரமணியம், (சண்டே அப்சர்வர் ஆசிரியர்) ஜஸ்டிஸ் கொடி ஏற்றுவித்து, ஆவேசமிக்க சொற்பொழிவாற்றினர். ஜஸ்டிஸ் வாலிபர்கள் தீவிரமாகப் பாடுபட்டு, பெரியாரின் பணியினால் தமிழகம் தக்க பயனடையுமாறு செய்தல் வேண்டுமென்றும், சர். கிரிப்ஸ் வருகைபற்றியும் தோழர் P. பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

தோழர் R. மதனகோபால்நாயுடு அவர்கள் B.A.B.L. மாநாட்டைத்திறந்து வைத்து ஜஸ்டிஸ் கட்சியின் ஆரம்பம், வளர்ச்சி, இன்றைய நிலை ஆகியவைகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

வரவேற்புக்கழகத்தலைவர் தோழர் C. N. அண்ணாதுரை M. A. அவர்கள், மாநாட்டுப் பிரதிநிதிகளையும், தலைவரையும் வரவேற்றுப்பேசினர். காந்தியார் ஆசிரமத்தில் முன்பு வந்து தங்கிய சர். கிரிப்ஸ், இம்முறையும் அங்கு செல்லுவதானல், பெரியாரின் மாளிகைக்குச் சென்று திராவிடர் விஷயமாகப் பேசவேண்டுமென்றும், திராவிட வாலிபர்களுக்கு ஆயுதந்தாங்கும் உரிமையை சர்க்கார் தரவேண்டுமென்றும், சமதர்ம நோக்கத்துடன் வாலிபர்கள் பணியாற்றவேண்டுமென்றும் கூறி, "விட்டஇடத்திலிருந்து தொடங்கி வேலை செய்யுமாறு" தோழர் விசுவநாதம் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

மாநாட்டுக்குத் தலைமை வகித்து சிறப்புற நடத்திக் கொடுக்கும்படி, தோழர்கள், நல்லசிவம்பிள்ளை, தண்டபாணிப்பிள்ளை, டாக்டர் தர்மாம்பாளம்மாள், சிவரத்தினம், T. P. வேதாச்சலம், ஆகியோர், கேட்டுக்கொண்டனர்.

உற்சாகமான கைதட்டலுக்கிடையே தோழர் K. A. P. விஸ்வநாதன், தலைமை வகித்து ஒரு மணி நேரம் இனிமையான சொற்பொழி வாற்றினர். சொற்பொழிவின் ஒவ்வோர் பகுதியிலும, மக்கள் தமது ஆர்வத்தைக்காட்டக் கைதட்டினர். தோழர் விசுவநாதம். தமது சொற்பொழிவில், ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகள், ஜஸ்டிஸ் வாலிபர் கடமை, ஆச்சாரியாரின் சூழ்ச்சி, சர். கிரிப்ஸ் வருகை, முதலியன பற்றி விரிவாகப் பேசிவிட்டு, கட்சியின் ஆக்கவேலைகளைச் செய்ய வேண்டிய தன் அவசியத்தை வற்புறத்திப் பேசினர். திராவிட நாடு தனிநாடாக வேண்டியதன் அவசியத்தைவலியுறுத்திக் கூறி விட்டு, ஆந்திரர் தனி மாகாணம் கோருவது போல் தமிழருக்கும் தனிமாகாணம்வேண்டுமென்றும் திராவிட நாட்டுப் பிரிவினை விஷயமாக, ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய பகுதிகளில் பிரசாரம் செய்யவேண்டு மென்றும், திராவிட நாட்டுப்படத்தை நிர்ணயித்து வெளியிட்டு வழங்கவேண்டு மென்றும், கட்சியின் பொறுப்பிலிருந்து விலகியவர்கள் மீண்டும் பணியாற்றும் நிலையைக் கட்சியில் உண்டாக்க வேண்டுமென்றும், கட்சியில் சோர்வு போக்கப் பட வேண்டுமென்றும், கட்சிக்கென நிதி திரட்டி, ஜில்லா தோறும் பிரசாரகர்கள் ஏற்படுத்த வேண்டு மென்றும், தோழர் விசுவநாதன் விளக்கிப் பேசினர். ஓராண்டுக்கு மேலாக ஓய்வாக இருந்தவர், மீண்டும் கட்சிப் பணியாற்ற முன்வந்ததை மாகாட்டினர் பெரிதும் பாராட்டினர். எனக்கு முதல் தலைவர் பெரியார், பிறகு சர். செல்வம் மூன்றாவது குமாரராஜா, நாலாவது பாண்டியன், ஐந்தாவது சாமியப்பா, இந்த ஐவரும் சேர்ந்து பிறப்பிக்கும் கட்டளையை ஏற்றுக்காரியத்தைச் செய்பவன் நான். தலைவர்கள் வழி காட்ட வேண்டும். நான் பின்பற்றுகிறேன்" என்றுகூறினர். பிறகுடாக்டர்நாயர்படத்தைத்தொழிலாளர்தலைவர்தோழர்நடேசமுதலியார்திறந்துவைத்தார். முற்பகல் நடவடிக்கை இத்துடன் முடிந்தது. பிற்பகல் 2-30 மணியிலிருந்து 4-மணி வரை விஷயாலோசனைக் கமிட்டி, தீர்மானங்களைப் பற்றி யோசித்தது.

4மணிக்கு மாநாடு மீண்டும் கூடியது. சர். பி. தியாகராயர் படத்தைக்காஞ்சி தோழர் A. K. தங்கவேலரும், பனகால் அரசர்படத்தைத் தோழர் T. R. கோதண்டராம முதலியாரும், டாக்டர் C. நடேச முதலியார் படத்தைத்தோழர் T. ஷண்முகம் பிள்ளை அவர்களும், பன்னீர் செல்வத்தின் படத்தைத் தோழர் T. S. நடராசப்பிள்ளை அவர்களும் திறந்து வைத்தனர்.

பிறகு 12 தீர்மானங்கள் நிறைவேறின. அதில் திராவிட நாட்டுப் பிரிவினையை அடிப்படையாகக் கொள்ளாத எந்த அரசியல் திட்டமும் திராவிடரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்ற தீர்மானத்தைக் குறித்து தோழர் C. N. அண்ணாதுரை 1 மணி நேரத்துக்குமேல் பேசினர்.

தலைவர் தமது முடிவுரையில் தீர்மானங்கள் பற்றிய கருத்துக்களைக்கூறி, வாலிபர்கள் ஜஸ்டிஸ் இயக்கத்தை வலுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

தோழர் மோகன சுந்திரம் வணக்கங் கூறினர். தோழர் அங்கமுத்து, வரவுசெலவு கணக்கைப்படித்தார்.

இரவு 7மணி சுமாருக்கு மாநாடு இனிது முடிந்தது.

ஜஸ்டிஸ் வாலிபர் மாகாண சங்கமொன்று நிருவப்பட்டது, தோழர் K. A. P. விஸ்வநாதன் தலைவராகவும், தோழர் அங்கமுத்து காரியதரிசியாகவும், தோழர் A. K. தங்கவேலர், பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### வரவு செலவு விபரம்.

| | |
|---|---|
| நன்கொடை, (வரவேற்பு டெலிகேட் டிக்கட்) | 148—8—0 |

**செலவு விபரம்.**

| | |
|---|---|
| சென். மேரிஸ் ஹால் வாடகை ... | 32—8—0 |
| ஒலி பெருக்கி ... | 14—0—0 |
| தபால் செலவு ... | 8—0—0 |
| அச்சுக்கூலி ... | 34—4—0 |
| வெளியூர் போக்கு வரவு ... | 16—0—0 |
| உள்ளூர் போக்கு வரவு ... | 22—0—0 |
| தந்தி செலவு ... | 6—0—0 |
| காகிதம் கவர், கொடி முதலியவைகள் | 7—0—0 |
| டெலிபோன் ... | 1—0—0 |
| மாலை ... | 7—0—0 |
| மொத்த செலவு ... | 147—12—0 |
| மீதம் ... | 0—12—0 |

### சின்னக் காஞ்சிபுரம் பார்ப்பனரல்லாதார் இளைஞர் கழகம்.

பிரதி வியாழன், ஞாயிறுகளில் மேற்படி சழகத்தில் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இராமாயண ஆராய்சி பற்றிய கூட்டங்கள் முடிவுற்று இந்த மாதத்துவக்கத்திலிருந்து பெரிய புராண ஆராய்ச்சி ஆரம்பமாகியிருக்கிறது. உள்ளூர் வெளியூர் வாலிபத்தோழர்கள் மேற்படி கூட்டங்களில் கலந்து கொள்ள அன்போடு அழைக்கப்படுகிறார்கள் என்று மேற்படி சழகத் தலைவர் T. P. S. பொன்னப்பனார் எழுதுகிறார்.

**பாமாவின் பிரார்த்தனை.** (4ம் பக்கத் தொடர்ச்சி)

மகனுக்குச் சர்க்கார் உத்தியோகம் கிடைப்பது பற்றி அப்புசாமிப்பிள்ளையின் முகம் மலர்ந்தது. சரவணமுத்து சந்தோஷமடைந்தான். மறுநாளே புதிய கர்ணத்திற்கு வரவேற்பும் விருந்தும் நடத்தினான். சிதம்பரய்யரின் கைப்பாவையானான் சரவணமுத்து!

வேலை பழக்குவதாகப்பாசாங்கு செய்துகொண்டு சரவணமுத்தை இரவு பகலாக வீட்டில் வைத்துக் கொண்டு வேலை வாங்கினார் சிதம்பரய்யர். அவர் "எள்" என்பதற்குள் அவன் எண்ணெயாக நின்றான்! ஐயரின் பெருமை பற்றிப் பிரசாரம் செய்தான். எதிரிகளைத் தோழர்களாக்கினான். ஏமாந்தோரிடம் பணம் பறித்துக் கொடுத்தான். எல்லாவற்றையும் செய்தான்!

அவர்கள் வீட்டிலேயே இருந்தமையால் சரவணமுத்துக்கு அழகிற்சிறந்த பாமாவை அடிக்கடிப் பார்ப்பதும், பேசுவதுமான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அவன் விரும்பினும் விரும்பாவிடினும் அவள் அடிக்கடி அவன் கண்களில் பட்டுக்கொண்டிருந்தாள். அன்புடன் பேசிப்பழகினாள். இவனும் களங்கமற்றுப் பேசிச் சிரிப்பான், குழந்தைகளோடு கொஞ்சுவான், விளையாடுவான்! இயற்கையின் செயல்! எவ்வளவோ இழுத்துப் பிடித்தும், பாமாவின் நெஞ்சம் சிறுகச் சிறுகக்கரைந்து சரவணமுத்துவிடம் சென்று லயித்துவிட்டது! ஆகவே அவனது சிரிப்புக்கும், கொஞ்சலுக்கும் பாமாகொண்டபொருள் வேறாயிற்று! எதனையோ நினைந்து ஏங்கினாள் அவள். பல இரவுகள் அவளது கண்கள் துயிலை மறந்தன. உடலுறுப்புகள் கனலில் வெந்தன!

"பால்ய விவாகம்" என்ற தமிழ்ப் பேசும் படம் ஊரில்நடந்துகொண்டிருந்தது, மேலதிகாரிகளுடன் கிராமங்களைச்சுற்றிவந்தஅலுப்பில் சிதம்பரய்யர் படுத்துக் கொண்டார். அவரது அனுமதிபெற்று, சேஷய்யரின் குடும்பத்தை, அதாவது பாமாவையும், இரு பெண் குழந்தைகளையும் சரவணமுத்து சினிமாவுக்கு அழைத்துச் சென்றான். விதவையின் துன்பத்தை விவரிப்பது அந்தக்கதை, எனவே பாமாவின் மனதில் பெரும்புயலையும், சரவண முத்துவின் மனதில் சிறு குழப்பத்தையும் கிளப்பிவிட்டது அந்தக்காட்சி!

திரும்பி வீட்டுக்கு வரும்பொழுது, வழியிலே அவனிடம் கூறினாள் பாமா "இந்தப்படம் ரொம்ப நன்றாயிருக்கிறது. அந்தனையும் வாழ்க்கையில் நடப்பது, கணவனை யிழந்துவாடும் இளம் கைம்பெண்கள் அனுபவிக்கும் நரக வேதனைகளை நானே வாய்விட்டுக் கதறி யிருந்தாலும், அந்தப் பெண்ணைவிட அதிகம் சொல்லியிருக்க முடியாது! என்ன பரிதாபகரமான வாழ்க்கை! அழுது அழுது என் கண்களும் வீங்கிவிட்டன. ஆனால் ஆண்களுக்கோ கல்நெஞ்சம். அவர்கள் மனசு எங்கே இளகப் போகிறது? உதாரணம் நீ போதுமே!"

இச்சொற்கள் சரவண முத்துவின் இதயத்தைச் சுருக்கென்று குத்தின! பகல்போல் நிலவெரிந்து கொண்டிருந்தது. பாமாவின் முகத்தை நோக்கினான் அவன், அந்தக்கண்களிலே தோன்றிய அசாதாரண ஒளியும், அந்தச் செவ்விய உதடுகளின் துடிப்பும் அவனுக்குள் பல உணர்ச்சிகளை ஒரே விநாடியில் புகுத்திவிட்டன!

"ஆண்கள் எல்லோருமே கல்நெஞ்சர்களல்ல!" என்று தலைகுனிந்த வண்ணம் மெதுவாகக் கூறினான் சரவணமுத்து. வார்த்தை தடுமாறிற்று.

அன்றிரவு அவன் வீட்டிற்குப் போகவில்லை. ஐயர்வீட்டுத் திண்ணையிலே படுத்துக்கொண்டான், என்னென்னவெல்லாம் எண்ணிற்று அவனது உள்ளம்! நல்ல நடுநிசி, அழகிய மலர் மாலையொன்றைத் தன் கழுத்தில் யாரோ அணிவதாகக் கனவு கண்டு விழித்தான் சரவணமுத்து, பாமாவின் மலர்க்கரங்கள் அவன் கழுத்தைச் சுற்றிக்கொண்டிருந்தன! திடுக்குற்றான், விழித்தான்! ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனால்..............சத்தியினுள் ஒடுங்கிற்று சிவம்! இருவரும் எழுந்து கொல்லைப்புறம் சென்றனர்;

(தொடரும்)

## புதிய படங்கள்!

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் மனோன்மணி என்ற புதிய தமிழ்ப் படம் தயாராகிறது.

### ராசா சாண்டோ

பிரபல டைரக்டர் ராசாசாண்டோ "ஆராய்ச்சிமணி" என்ற படத்தை டைரக்ட் செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறார். கோவை கந்தன் ஸ்டுடியோவில் இப்படம் தயாராகிறது.

### டி. கே. சகோதரர்கள்

டி கே. சண்முகம் சகோதரர்கள் நடத்திவரும் பால சண்முகானந்த நாடக சபையில், தமிழ்வளர்ச்சி கருதி ஔவையார் என்ற புதிய நாடகம் நடத்தப்பட்டு வருகிறது.

### ராம்-ரஹீம்

இந்து-முஸ்லீம் ஒற்றுமையை விளக்க பாரத் மூவிடோன், ராம்-ரஹீம் என்ற படத்தைத் தயாரிக்கிறார்கள் அரசியல் வாதிகள் தயாரித்த ஒற்றுமைத்திட்டங்கள் உருப்பட வில்லை. படக்காரர் என்ன சொல்கிறார் பார்ப்போம் பிறகு.

## கிட்கிந்தையில் கிரிப்ஸ்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றவர், இன்று போருக்கு ஆட்கள் திரட்ட முன்வருகிறாரே, இது ஏன்? என்ற சந்தேகம் எல்லோருக்கும் ஏற்பட்டிருப்பதைத் தெரிந்துகொண்ட ஆச்சாரியார், தமது நெல்லைப்பிரசங்கத்திலே **"நான் மந்திரியாவதற்கு இந்தப் பிரசாரம் செய்வதாக கெடுதலான எண்ணமுள்ள சிலர் நினைத்துக் கொண்டிருக்கலாம்"** என்று கூறினார். "நான் குடித்துவிட்டுப்பேசுவதாக இவன் எண்ணுகிறான். நானா குடித்தேன்" என்று குளறாத குடியன் கிடையாது!

நான், போன வாரமும் சொன்னேன், அதற்கு முந்திய வாரமும் சொன்னேன், ஆச்சாரியாரின் இந்த சுற்றுப்பிரயாண நோக்கம், பதவி பெறுவதற்குத்தான் என்று. இது கெடுதலான எண்ணத்தால் சொன்னதல்ல! ஆச்சாரியாரின் அந்தரங்க ஆசைகள் அவரது சொற்பொழிவிலே அவ்வப்பொழுது வெளிப்படுகிறது, அதைக்கண்டு நான்சொன்னதாகும். இப்போதும் சொல்கிறேன், பதவிக்காகத்தான் இந்தப் பிரசாரம்! இல்லை என்றால், ஆச்சாரியார், "யாரோ மந்திரிகளாக இருக்கட்டும், எனக்கு அக்கரை இல்லை, ஜப்பானிய ஆதிக்கம் கூடாது. அதைத்தடுக்கவேண்டும், போரிடவேண்டும், அதற்காகமக்கள் கிளம்பவேண்டும்" என்று கூறட்டுமே பார்ப்போம். யுத்த ஆதரவுதேட, சர்வகட்சித் தலைவர்களும் கொண்ட ஒரு பிரசாரசபை நிருவட்டும், அது நியாயம். ஆனால், யுத்த ஆதரவுபெருக வேண்டுமானால், நமக்குப் பதவி கிடைக்கவேண்டும் என்று கருதினால், அதையார் ஒப்புக்கொள்ள முடியும்?

பதவிவேண்டாமே! என்றுகூற அவருக்குத்துணிவில்லை. "அப்படித்தான் வைத்துக்கொள்வோம். நான் மந்திரியாகி விடுவதால் உங்களுக்கு ஏற்படும் நஷ்டம் என்ன?" என்று கேட்கிறார் ஆச்சாரியார். என்ன நஷ்டம்? கேளும் ஓய், நீர்மந்திரியாகி விட்டால், போர் ஆதரவு குறையும்; காரணம், உமது ஆட்சி இந்த மாகாணத்துத் திராவிட மக்களால் வெறுக்கப்பட்டது. மீண்டும் உமக்கு முடி சூட்டுவார்களேயானால், இஸ்லாமியர், திராவிடர் ஆகிய இரு இனமக்களுக்கும் மனம் புண்படும். இவரிடந்தானா ஆட்சி போகிறது என்று இருதய வலியுடன் கேட்பார்கள். உமது யுத்த ஆதரவுப் பேச்சு, மனப்பூர்வமானதுதானா? மாற்றானிடம் நீர் மண்டியிடாது எதிர்த்து நிற்பீரா? மகாத்துமாவின் பேச்சைக் கேட்டு, மண்டலத்தை மாற்றானிடம் விட்டு விடுவீரானால் என்ன கதி? என்ற எண்ணங்கள் தோன்றக் கூடும். இத்தகைய எண்ணங்கள், எதிரியைத் தலைவாயலில் காணும்நேரத்தில் மக்களுக்கு இருப்பது மகா ஆபத்தானதாகும். இது தானய்யா, நீர் வருவதால் ஏற்படக் கூடிய நஷ்டம், பயங்கரமான நஷ்டம். சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ், முன்பு இந்தியா வந்த போது, காங்கிரஸ் தலைவர்களுடன் கூடிக் குலவினார். காந்தி ஆசிரமத்தில் தங்கினார். அத்தகையவர், இப்போது. இதர கட்சிகளுக்கு நம்பிக்கை பிறக்கக் கூடிய விதத்தில் தமது விசாரணையை நடத்த வேண்டும். பூர்வாஸ்ரம யோசனைகள், பூசுரர் சேர்க்கையால் வரும் புளகாங்கிதம், ஆகியவைகள் சர். கிரிப்சுக்கு இருக்கும் ஆகவே அவரைச் சரிப்படுத்திக் கொள்ளலாம் என்று காங்கிரசார் கருதுவர். அங்ஙனம் நடக்கும் என்று, சர். கிரிப்ஸ் தமது பேச்சாலோ, போக்காலோ காட்டிக் கொண்டால், இந்த நாட்டுப்பழங் குடிமக்களின் பாசத்தைப் பாழாக்குவதாக முடியும்.

பெர்லின், டோக்கியோ, ரேடியோக்கள், "இந்தியாவிலுள்ள பெரிய கட்சியாகிய காங்கிரஸ் பிரிட்டனை ஆதரிக்க வில்லை" என்று விஷமப் பிரசாரம் செய்கின்றன. அதை அடக்க, ஏதாவது செய்து காங்கிரசை யுத்த ஆதரவில் சேரும்படி செய்ய வேண்டும் என்பது பிரிட்டிஷ் சர்க்காரின் நோக்கம் என்று காங்கிரஸ் வட்டாரத்தில் கூறப்படுகிறது. பிரிட்டிஷார் இந்தக் கருத்தோடு, காங்கிரசைத்தட்டிக் கொடுக்கத் துணிந்தால், அதனால், இஸ்லாமியரும் திராவிடரும் மனம் நொந்து கொள்வர் என்பது திண்ணம், அது, பெர்லின், டோக்கியோவுக்கு எட்டாமற் போகாது. அப்போது, பெர்லின், டோக்கியோரேடியோக்கள், "பிரிட்டிஷார் கைராட்டினத்தைக் கட்டிக் கொண்டு அழுகிற காந்திக்கட்சியுடன் குலவுகின்றனர், அதனால் இஸ்லாமியரும் திராவிடரும் மனம்புழுங்கி உள்ளனர். அவர்கள் பிரிட்டிஷாரின் போக்கை ஆதரிக்க மறுக்கிறார்கள்" என்று பேச எவ்வளவுநேரமாகும்? என்பதைப் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் யோசித்தே தீருவார்கள். ஆச்சாரியாரினிடம் அன்புகொண்டு ஆங்கிலேயர், பிறரைப்புறக்கணித்தால் அதுபெருமையையோ, பலத்தையோ பிரிட்டிஷாருக்கு அளிக்காது. எட்டுகோடி முஸ்லீம்கள், "ஏனோ தானோ" வென்று இருக்கிறார்கள், காங்கிரசும் பிரிட்டிஷாரும் கூட்டாகிவிட்டனர் என்பதனால், முஸ்லீம்கள் மனமுடைந்து விட்டனர், என்ற செய்தி, இந்தியாவில் மட்டுமல்ல, எல்லைப்புறத்திலிருந்து துவங்கி, ஆப்கன்நாடு, பெர்ஷியா, சிரியா, அரேபியா, துருக்கிவரை, துடிதுடிப்பை உண்டாக்கும். சர் கிரிப்ஸ், கிட்கிந்தா காட்சியைமட்டும் கண்டு, முடிவு செய்ய மாட்டார், செய்தால், அந்தமுடிவு, மற்றோர் ம்யூனிச்சாகவே இருக்கும்!!

"**ஜீவமரண போராட்டத்தில், மந்திரிப்பதவி சர்வசாதாரண விஷயமாகும், இதையே நினைத்துக்கொண்டிருப்பவர்கள் மதியீனர்கள்! மதியீனர்களுக்கு அரசியலில் இடம்** இல்லை" இது ஆச்சாரியார் பேசியது. காங்கிரஸ் வட்டாரம் இதை மறவாதிருக்கவேண்டும் என்பது எனது விருப்பம்! எங்கள் ஆச்சாரியார் மந்திரியாகப் போகிறார்! ஜவஹர் மந்திரியாகப் போகிறார், என்று மார்தட்டிக்கொண்டு காங்கிரஸ் தோழர்கள் பேசக்கேட்டிருக்கிறேன். அவர்களை, ஆச்சாரியார், எந்தப் பட்டியில் சேர்த்திருக்கிறார் என்பதைக் கவனிக்க வேண்டுகிறேன்!

## பிரசங்கமேடை!

(3ம் பக்கத் தொடர்ச்சி)

களின் சார்பாக அவர்கள் பணியாற்ற முன்வர மாட்டார்கள். பெரியார் கூறியபடி, "அந்த வேட்டை நாய்கள்" இருக்கும்வரை, நம்மவர்கள் நமதுபக்கந் தானே இருப்பார்கள் என்று கூறுவதற்கு இயலாது. போதையில் இருப்பவனுக்கு, எதிரே நிற்பது தனது மனைவி என்று தெரிகிறதா! ஒரு உருவம் நிற்பதுமட்டுமே தெரிகிறது, அதிகபோதைக்காரனுக்கு அதுவும் தெரிவதில்லை. ஆரியம், அதிக சக்தி படைத்த போதை. அதைப்பருகிக்கொண்டிருக்கும் வரை "நமது பிரமுகர்கள்" நமக்குப் பயன்படுவது மிகக்கஷ்டம். இதனைத்தான் பெரியார் அன்று மிகத்தெளிவாகத்தமது சொற்பொழிவில் விளக்கிக் காட்டினார். நமது இயக்கத்தைச் சார்ந்த செல்வவான்கள் இந்த சொற்பொழிவை ஊன்றிப்படித்து உணர்ச்சிபெற்று, தமிழர் உய்யும் மார்க்கத்தைத் தேடவேண்டும். ஜஸ்டிஸ் கட்சிக்காரர் என்றால், தேர்தலில் காங்கிரஸ் காரருடன் போட்டிபோடுவது, கலெக்டர் துரையிடம் கைகுலுக்குவது, விருந்துக்குப்போவது என்றுதான் பொருள் என்று கருதினால் என்ன பலன்! ஜஸ்டிஸ் இயக்கத்தவர் என்றால், ஆரியத்தை அகற்றுபவர், அன்புவழி கொண்டவர் புரட்டரோடு சேரமறுப்பவர் என்று பொருள்கொள்ள வேண்டும். ஜஸ்டிஸ் இயக்கத்தில் சேர்ந்துழைக்கும் ஆயிரக்கணக்கான வாலிபர்கள், இந்தக்காரியம் நடைபெறும் என்ற நம்பிக்கையினால் பணியாற்றுகிறார்களேயொழிய, படாடோபத்துக்காகவல்ல. அவர்களின் உழைப்பு வீண்போகிறது என்றால், அதற்குக்காரணம் அந்தஸ்த்துப் படைத்தவர்கள் ஆரியக் கூட்டுறவை "ஆனந்தலாஹிரி" யாகக் கொண்டிருப்பதே யாகும்.

## அறிவிப்பு.

தமிழ்நாட்டில் முதன் முதல் தென்இந்திய தமிழ் (சித்த) வைத்திய சங்கத்தை நிறுவி தமிழ் வைத்தியத்தின் அருமை பெருமைகளை அரசினருக்கு எடுத்துக்கூறி அதனை ஒத்துக் கொள்ளச் செய்து தமிழ் வைத்தியத்துக்கு புத்துயிர் அளித்தவரும், சென்னை நகரசபை முன் அங்கத்தினரும்,

சென்னையில் தமிழ் மருத்துவசாலையை நிறுவி பல கொடிய வியாதிகளை எளிதாய் நீக்கிவருபவரும், ஏழைகளுக்கு இலவச வைத்தியசாலை நடத்திவருபவரும், நெடுநாள் பல வகை மருந்துகளால் வைத்தியம் செய்தும் நோய் நீங்காமல் துன்பப்படுகிறவர்கட்கு மணி, மந்திரம், மருந்தெனும் மூவகை பக்குவங்களாலும் இயற்கை மருத்துவ முறைகளாலும் வைத்தியம் செய்பவரும்,

ஆப்ரேஷன் (அறுத்துவைத்தியம்) செய்யவேண்டுமென முடிவுசெய்யப்பட்ட பலநோய்களை அறுக்காமல் (ஆப்ரேஷன் செய்யாமல்) அற்புதமாக நீக்கிவருபவருமாகிய மருத்துவ ஞாயிறு பண்டித எஸ் எஸ். ஆனந்தம் அவர்கள், காஞ்சிபுரத்தில் பலர் விருப்பத்தின்படி அடியிற்காணும் விலாசத்தில் வந்திருக்கின்றார்கள்.

பெண்களுக்கு வைத்தியம் செய்ய பதிவான வைத்தியர் (ரெஜிஸ்டர்டு மெடிகல் பிராக்டிஷனர்) A. ராதாம்மாள் வந்திருக்கின்றார்கள்

சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் கட்டி எனும் ஈரல் மண்ணீரல், வீக்கநோய்கள் வராமல் தடுக்கவும் வந்த நோய்களை விரைவில் போக்கவும் பண்டித ஆனந்தரின் மருந்து மிகச் சிறந்ததாகும்.

நாள்தோறும் காலை 7-30 மணிமுதல் 10-30 மணிவரை நோயாளர்களைப் பார்த்து வைத்தியம் செய்யப்படும்.

செயலாளர்,

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

ஆலோசனை இடம்,

148, கடைத்தெரு சேக்குப்பேட்டை. காஞ்சீபுரம்.

## வானம்பாடி வெளியீடுகள்.

●

பாரதிதாசன் இயற்றிய

எதிர்பாரா முத்தம் 0-8-0.

●

ஈழத்தடிகள் எழுதிய

பெரிய புராண ஆராய்ச்சி

| | | |
|---|---|---|
| முதல் பாகம் | | 0—6—0. |
| 2-ம் | ,, | 0—2—6. |
| 3-ம் | ,, | 0—3—0. |

மேற்படி புத்தகங்கள் எம்மிடம் கிடைக்கும்.

தபாற் செலவு வேறு.

●

வானம்பாடி நூற்பதிப்புக் கழகம்.

51. நிமந்தக்காரத் தெரு,

சின்ன காஞ்சீபுரம்.

# "கந்த விலாஸ்"

## அ. கந்தசாமி முதலியார் & சன்ஸ்.,

ஜவுளி வியாபாரம், ஆடிசன்பேட்டை. காஞ்சீபுரம்.

கிளை ஆபீஸ்கள்:—

கடைவீதி
சேலம் டவுன்.



சுவாமி தேருக்கு எதிரில்
கீழரதவீதி
திருநெல்வேலி.

காஞ்சீபுரம், சேலம், எங்கள் சொந்தக் கைத்தறியில் நவீன நாகரீகத்திற்கேற்றவாறு தயாரிக்கப்பட்ட பட்டு & ஜவுளி சேலைகளும், பட்டு & நூல் ஜரிகை துணிகளும், பனாரஸ், கராச்சி, கொள்ளேகாலம், பெங்களூர், மதுரை, கோயமுத்தூர், புல்லம்பேட்டை, புதட்டூர் முதலிய ஊர்களில் தயாராகும் சேலை, சித்தாடை, பாவாடை, ரவிக்கைகளும், மில்லில் தயாரிக்கப்பட்ட கோட்டிங், ஷர்ட்டிங், வேட்டி, வாயில் துணி முதலான எல்லாவித ஜவுளிகளும் விலை சகாயமாயும், சரக்கு நயமாயும், சாயம் உத்திரவாதமாயும் எங்களிடம் கிடைக்கும். ஒரு முறை வாங்கி உடுத்தி பார்க்க வேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**கந்தவிலாஸ் :: A. K. & SONS.,**

Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A at 51 Nimanthakara Street, L. Conjeeveram.